# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உ௩ } சருவசித்து– ஆவணி, புரட்டாசி 1947— ஆகஸ்டு செப்டம்பர் { மலர் ரு, சா

## திருவாசகத் திருச்சதகப் பேருரை.

:: தமிழ்த் தாய்க்கு ஒரு கதிர் மணி யணி ::

:: தமிழ் மக்கட்கு ஒரு கதிர் மணி விளக்கு ::

இப் பேருரை, தமிழ்த் தாயின் தனிச்சீர்மைந்தர்களுள் ஒருவ ராகிய மகாமகோபாத்தியாயர், முதுபெரும்புலவர், பண்டிதமணியார், உயர்திரு. மு. கதிரேசச் செட்டியா ரவர்கள், தமிழ் மக்கட்கு அருளிய தமிழ்ப் பெருங்கடல் அமிழ்தம்: பண்டித மணியார் வட மொழி, தென் மொழி களில் உயர்ந் தோங்கிய நல்லிசைப் புலமையர், விரிவுரைகள் நூல் வெளி யீடுகள், ஆசிரிய நெறி வண்மைகள் முத லியவற்ருல், தமிழ் நாட்டிற்கு நெடுங் காலமாகப் பெரு வாழ்வுகள் செய்து வரும் வள்ளலார் எனலை அறியாத தமி ழறிஞரும் உளரோ! அவர் தம் இனிய விரிவுரைகளை, சிறப்பாகச் சமய நெறிச் சார்பான இனிய கனிவுரைகளைக் கேட்டு மகிழும் புலவர்களும் செல்வர்களும் அவை யாவும் கட்டுரைகளாகவும் நூலுரைகளாகவும் அச்சாகி வெளி வரல் வேண்டுமென வேண்டி நிற்பர். இவர் தம் வேண்டு கோளின் பயனுக எழுவது இத் திருவாசகப் பேருரை யாகும். இவ் வரிய பெரிய உரையின் முதல் வெளி யீடே இக் கதிர் மணி விளக்காகும்.

இவ் வினிய உரைநூலின் எவ் வெப் பக்கத்தே எவ்வெவ்விடத்தே காணினும், ஆங்காங் கெல்லாம்,

தெய்வத் திருவாசக நூல் அடிகளின் ஒண்மையினை யெல்லாம் வெளிப்படுத்தும் நுண்ணிய பொன்னுரைகள், எத்தகையோரும் மிக எளிதில் உணர்ந்து கொள்ளும் வண்ணம் எண்மைய நெறியிற் செல்லுதலை, நன்கு உணரலாம். மற்றும், இதன்கண், சமயநூற் புலமையும் தத்துவ உணர்ச்சியும் கூடித் ததும்பும் கனிவுரைகளின் இனிமைகளோ, அப் புலமைப் பொன் னுரையிற் பொருந்தி மணக்கும் அருமை நறு மணமெனத் திகழ்வது இனிது உணரலாம். வேண்டு மிடங்களில் ஒத்த வடமொழி மேற்கோள்களும் இணைக்கப்பெற்றுத் திகழ்கின்றன. இங்ஙன மாகிய இவ் வுரையின் தனிப் பெருஞ் சீர்களை எடுத்துக் காட்டி விரிப்பின், அஃது ஓர் உரை நடைப் பெரு நூலாகும். சிவபெருமான் திருவருட் பெருக்குடன், மணிவாசகரது புலமை, கனிவுகள் சான்ற உள்ளத் தெழுந்தது திருவாசகம் ஆகும். மணிவாசக அடிகள் திருவருட் பெருக்குடன், நம் பண்டித மணியார் புலமை கனிவுகள் சான்ற உள்ளத் தெழுவது இவ் வினிய பேருரை யாகும்.

தமிழ் நாட்டுப் புலவர்களும், செல்வர்களும் நம் பண்டிதமணியாரைச் சூழ்ந்து, இக் கதிர்மணி விளக்கின் தொடர்பாகிய ஏனைய மணி விளக்குக்களையும் விரைவில் வெளி வரச் செய்து, தமிழ்த் தாயின் திருவடிக்கும், தமிழ் மக்களின் பெரு வாழ்விற்கும் உரிமை யாக்கு வார்களாக. இவ் விளக்கு, தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் பெற்றுப் பயனுறற் குரியது.

**கிடைக்கும் இடம் :—**

பொதிகைப் பதிப்பகம்,

அப்பாவு முதலித்தெரு, கடலூர் N. T.

விலை 8—0—0.

# பழநிச் செலவு.

திரு. கோ. முத்துப்பிள்ளை B. A. அமைச்சர் அலுவலகம், சென்னை.

திண்டுக்கல்லி லிருந்து புகை வண்டி புறப்படும்போதே பழநி யாண்டவனைப் பார்த்து மகிழ எல்லை யற்ற விருப்புடன் பயணம் செய்யும் அடியார்கள் மிகுந்த கிளர்ச்சி யடைகின் றார்கள். புகை வண்டி ஒவ்வொரு கொடியும் ஆண்டவன் இருப்பிடத்தை அணுகிக் கொண்டே இருக்கின்ற தென்பதை எண்ண அவர்கள் உள்ளமும் உடலும் ஒருங்கே களிப் பெய்து கின்றன. ஒவ்வொரு புகை வண்டி நிலையத்திலும் வண்டி நிற்கும்போது அவர்கள் பொறுமையை இழந்து விடுகின் றார்கள். 'இன்னும் எத்துணைப் புகை வண்டி நிலையங்களைக் கடக்க வேண்டும்?' என்ற கேள்வியை ஓயாது கேட்கின் றார்கள். ஆண்டவனிடம் அடியார் காட்டும் அன்புதான் என்னே! ஒரு கொடி ஆண்டவனை மறந்துவிடுவோம். பழநி யில் காதலி உறைவதாக வைத்துக் கொள்வோம். காதலன் திண்டுக்கல்லி லிருந்து பழநி நோக்கிப் பயணம் செய்வ தாக வும் நினைத்துக் கொள்வோம். காதலனின் நிலையையும் அடி யாரின் நிலையையும் சீர் தூக்கிப் பார்த்தால், வேற்றுமை எது வும் காண்பதற்கில்லை. ஒரு பொருளின்மீது அள வற்ற அன்பை அடைக்கல மாக வைத்துவிட்டால், அப் பொருள் அன்பு பூண்டவரை ஆட்டி வைக்கும் அளவைத்தான் அறுதி யிட்டுக் கூற இயலுமா? அப் பொருள் அவர்களை எவ்வளவு ஆட்டி வைத்தாலும், அதைத் துன்பமென அவர்கள் எண்ணு கின்றார்களா? இல்லை, துன்பத்திற்கும் இன்பத்திற்கும் இடையே யுள்ள தொலைவு தூளாக்கப் பட்டுத் துன்பமே இன்பமாக மாறி விடுகின்றது!

பழநியில் புகை வண்டி நின்றவுடன் ஏறக் குறைய எல் லோருமே இறங்கி விடுகின்றார்கள். வருகின்ற வழியிலேயே 'இதோ தெரிகிறது பாருங்கள்—ஆண்டவன் உறையும் மலை' என்றும் 'இல்லை, அஃதன்று. அதற்கடுத்த படியாகத் தெரி வதுதான் அப்பனின் இருப்பிடம்' என்றும் திசைகள் தோறும் கையைக் காட்டி ஆரவாரம் செய்துவரும் அடி யார்கள் 'இதுதான் பழநிமலை' என்று ஐய மறத் தெரிந்த வுடன் வண்டியைவிட்டு அவர்கள் இறங்கும் பரபரப்பை எழுத் தில் கொண்டுவர இயலாதெனவே தோன்றுகின்றது. மனத் தின் விரைவில் செல்லக்கூடிய போக்கு வரவு சாதனங்கள் இதுவரை கண்டுபிடிக்கப் படாமலிருப்பது அடியார்களுக்குப்

பெரும் ஏமாற்ற மாகவே இருந்து வருகின்றதென நாம்முடிவு செய்வதில் தவறில்லை. இந்நேரம் கண்டுபிடிக்கப் பட்டிருந்தால் திண்டுக்கல்லில் புறப்படும் நேரத்திலேயே அடியார்கள் பழநியில் இருக்க மாட்டார்களா ?

புகை வண்டியில் இருந்தபடியே சின்னேரம் சிந்தனையில் ஆழ்ந்தேன். மக்கள் வாழ்க்கையே ஒரு பயணம் என்று சொல்கின்றார்கள். அந்தப் பயணத்தில் மிகச் சிறு பயணங்கள் இடையிடையே நிகழ்வதை எண்ணிப் பார்க்க வியப்பாக இருந்தது. அந் நேரம் என் எதிரே குன்றுகளின் எழிற் காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றுவதும் மறைவது மாக இருந்தன. மக்களின் தோற்றமும் மறைவும் இவற்றைப் போன்றவை தானே என எண்ணுவதற்கே நடுக்கமாக இருந்தன. குன்றின் சில பகுதிகளில் வெய்யில் விரிந்திருக்கவும் வேறு சில பகுதிகளில் முகிலின் நிழல் விரிந்திருக்கவும், பிறகு வெய்யில் விரிந் திருந்த இடங்களில் முகிலின் நிழல் ஓடிப் பரவவும் முகில்நிழல் படர்ந்திருந்த இடங்களில் வெய்யில் நிழல் பரவவும் காட்சிகள் மாறி மாறிக் கொண்டே இருந்தன. ஒளியும் நிழலும் வாழ்வின் இன்ப துன்பங்களை நினைவிற்குக் கொண்டுவந்தன. ஆயினும் இருளும் ஒளியும் மாறி மாறி வரும் தன்மையைக் கண்டு, துன்பத்தில் மூழ்கி யிருப்போர் அடுத்தபடியாக இன்பம் கைகூடும் என எதிர்பார்த்து மனந் தளராது மேன் மேலும் முயற்சி செய்து வாழ வழியுண்டு என்பதையும் நினைவூட்டுவ தாக எண்ணினேன்.

பங்குனி உத்திரம் போன்ற திருநாட்களில் எவ் வளவு மக்கள் பழநியில் கூடுகின்றார்கள் என்பதைக் கணக் கிடுவது அரிதாகும். எங்கு நோக்கினும் மக்கட் கூட்டம். மக்களால் நிரம்பிய மா பெருங் கடல். உண்மைக் கடலில் நீர் அலை எழுவதுபோலவே, இந்தக் கடலிலும் மக்கள் அலை. ஆழாழியின் ஓயா ஒலிபோன்று இந்த மக்கட் பெருக்கிலும் வானைப் பிளக்கும் பே ரொலி காதைச் செவி டாக்குகின்றன. முருகனைத் தமிழ்க் கடவுள் என்று தமிழர்கள் கூறிக் கொண்டு தங்களுக்கே உரிமை பாராட்டிக் கொண்டாலும், இளையோனை எங்கள் கடவுள் என்று போட்டி போட்டுக் கொண்டு வழிபடும் எண் ணிறந்த மலையாளி மக்களைப் பழநியில் சாலவும் காணலாம். மலையாள மொழியும் கன்னித் தமிழும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள். மலையாளி மக்களும் தண் டமிழ் நாட்டாரும் தென் னாட்டுப் பெரு

மக்கள். ஆண்டவனை வழிபடும் வகையிலே ஒற்றுமை காட்டும் இவ் விரு மொழி பேசுவோரும் மற்றைய துறைகளிலும் ஒற்றுமை மனப் பான்மையை வளர்த்து ஒருவர்க்கொருவர் உறு துணையாய் உலகில் உயர்நிலை எய்த உழைப்பார்களாக.

நீக்கமற எங்கும் நிறைந் துள்ள இயற்கையின் ஒப்பற்ற கொலு மண்டபம்தான் பழநி. எங்கும் சிறு சிறு மலைகள். பச்சைப் பசே லென்ற செடி கொடி மரங்கள். கண்ணைக் கவரும் பசுமை. கருத்தை ஈர்க்கும் நெடிய குன்றுகள். குன்றுகளுக்கிருக்கும் திண்மையும் வானளாவிய முடிகளை யுடைய உயரமும் மக்கள் உடலுக்கும் எண்ணத்திற்கும் ஏற்பட்டால் எவ்வளவோ நன்மை பெருகி வளரும். பல்வகைச் சூழ்ச்சி வலைகளிலே சிக்கித் தவிக்கும் தமிழ் மக்களுக்கு இந்தத் திண்மையும் உயர்ந்த எண்ணங்களும் மிகமிக இன்றி யமையாதனவாகும். மலை முகடுகளிலே முகிற் குழாம் படிந்து கிடப்பதைப் பார்க்க எல்லை யற்ற மகிழ்ச்சி யேற்படுகின்றது. ஒன்றை ஒன்று விட்டுப் பிரிய உளமிலா அகத்துறை இதைப் பார்த்துத்தான் வகுக்கப் பட்டதோ என்ற ஐயத்திற்கும் இடமளிக்கின்றது இந்த மலையாடு மஞ்சுக் காட்சி. இயற்கை எங்கெல்லாம் அழகு மலிந்து காணப் படுகின்றதோ அங்கெல்லாம் முருகன் உறைகின்ருன் என்பதாக அறிஞர் கருதுகின்றனர். அக் கருத்துப்படியே இயற்கைத் துள்ளி விளையாடும் பழநியில் குன்றின் உச்சியிலே முருகன் கோயில் கொண் டெழுந்தருளி யிருப்பது மிகமிகப் பொருத்தமாகின்றது.

கதிரவனைக் கைக் குடையே மறைத்து விடும்போது முகிற் கூட்டங்கள் அவனை அடிக்கடி மறைத்து விடுவதில் வியப் பில்லை. வெய்யிலோன் தன் கதிர்களின் முழு வெப்பத்தையும் காட்ட முடியாமல், முகிற் கூட்டங்கள் அவனைக் கண்டித்து விடுகின்றன. எவ்வளவோ வல்லமை பொருந்தியவனுக இருந்தாலும் எதிர்த்து நிற்கும் மா பெருங் கூட்டத்தின் முன் தனி ஒருவன் என்ன செய்ய முடியும்? அந்தோ! பகலவன் நம் இரக்கத்திற் குரியவ ஞகின்ருன்! குளிர்ச்சியான வளி மண்டிலம் இயங்கு மிடங்களில் மக்கள் யாவரும் மடி யின்றி மிகவும் சுறு சுறுப் பாகக் காணப் படுகின்றனர். காட்டாக உதக மண்டலத்தில் ஒய்ந்து உறைவோர் ஒருவரும் இரார். பழநிக்குச் சென்றவுடன் சுறுசுறுப் பாக நான் நடந்துகொண்டது எனக்கே வியப் பாக விருக்கின்றது. நானே சுறுசுறுப்புக் காட்டினே னென்ருல் பிறரைப்பற்றி நான் சிறி தளவுகூட ஐயப்பட இடமில்லை! பெரு முயற்சி

செய்து பிற இடங்களில் முடிக்கப்படுகின்ற வேலைகளைக் குளிர்ச்சியான ஊர்களில் உறைகின்ற மக்கள் எளிதாகச் செய்து முடித்து விடுகின்றார்கள். இதை எண்ணிப் பார்த்த பொழுது எனக்கோர் ஆசை பிறந்தது. நம்மிடையே குடத்தி லிட்ட விளக்காக வாழும் பெரும் புலவர்களை யெல்லாம் அழைத்து அவர்கள் அன்றாட வாழ்க்கைக் கவலைகளை யெல்லாம் போக்கிப் பழநியைப் போன்ற ஊர்களிலே உறைய வைத்து நமது அன்பையும் ஆதரவையும் வேண்டிய மட்டும் கொட்டிக் கொடுத்து, கைம்மாறாக 'நீங்கள் நிலையான பயன் தரும் நூல்களை ஆக்கித் தரல்வேண்டும்' என்று அவர்களை வேண்டிக் கொள்ள லாகாதா என்ற எண்ணம் என் உள்ளத்தில் அலை அலையாக அடித்தது. புலவரைப் பேணும் முயற்சியிலே தமிழ் மக்கள் ஈடுபடுவார்களாக.

பல படிகளைக் கடந்து சென்றால்தான் முருகனை அடைய முடியும். இதைப் பழநியில் ஆண்டவன் காட்சிக்காகச் செல்பவர்கள் நன்கு அறிவார்கள்.

இரவில்கூட அடியார்கள் கூட்டங் கூட்டமாகப் பழநியில் வந்தடைகின்றார்கள். ஆனால் தங்குவதற்கு வசதியான இடங்கள் மிகுதியாக இல்லை. கால் ஓய்ந்து உடலில் களைப்பு மேலிட்டுத் தூக்கத்தால் கண் ணிமைகள் தாமாகவே மூடிக்கொள்ளும் நிலையில், தங்குவதற்கு இட மில்லாமல் நீண்ட தொலைவி லிருந்து வந்தவர்கள் தவித்துப் போகின்றார்கள். ஆண்டவன் தொண்டையே அருந் தொண்டாகக் கொண்டுள்ள பெருஞ் செல்வர்கள் தங்கு மிடங்கள் மிகுதியாக அமைப்பதில் ஆர்வம் காட்டலாம்.

இயற்கையாகவே அமைந் துள்ள குன்றின் மேலே இயற்கைக் கடவுளான முருகன் அழகாக அமர்ந் துள்ளான். குன்றின் உச்சியை அடையக் கட்டப்பட்ட கருங்கற் படிகளுண்டு அப்படியை அறிந்து செல்வதற்குப் போடப்பட்ட மின்சார விளக்குகள் ஒளிர்கின்ற காட்சி இரவில் கண் கொள்ளாக் காட்சி யாக விளங்குகின்றது. முருகனைக் காணும் வேட்கையுடன் இந்த மின்சார விளக்குகளும் ஒன்றன்பின் ஒன்றாக ஒழுங்கான வரிசையிலே மலையேறிச் செல்கின்றனவோ? எனத் தொலைவிலிருந்து பார்ப்போர் கருத்திற்கு விருந்தாக மின்னுகின்றன. இயற்கைக் களி நடம் புரியும் இடத்திலே கூட மக்களால் கண்டு பிடிக்கப் பட்ட மின்சார விளக்குகள் மக்களின் அறிவின் திறத்தை நினைவிற்குக் கொண்டு வருகின்றன. 'அறிவு பெருகுக' எனக் கூறி இச் சிற்றுரையை

# உள நூல்

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, திருவாரூர்.

## மனத்தின் ஆற்றலும் நோக்கமும்.

மனம் என்பது நினைக்கும் ஆற்றலுடையது என்று முன்பு ஆய்ந்தோம். எவ்வாறு சிறு விதையிலிருந்து அரசர் நாற்படையுடன் தங்கி இளைப்பாற நிழலைச் செய்யும் பல கிளை இலை காய் கனி நிறைந்த ஆலமரம் உண்டாகின்றதோ அஃதேபோல பற்பல செயற்கரிய செய்கைகளை முடிக்கும் பற்பல செய்கைகளுக்கும் வித்தாவது மனத்தி னுற்றலே யாம்.

பூமியில் புதைந்து கிடக்கும் பொன் மணிக் குவை போல மனத்தில் மறைந்து வெளி வராத சிறந்த எண்ணங் கள் நிறைந்து கிடக்கும் நிலையுமுண்டு.

இன்னும் சிறந்த விலையேறும் வயிரக் கல்லா யிருக்க லாம். பட்டை போடாத நிலையில் மதிப்பு சரியா யில்லா ததைப் போல சிறந்த எண்ணங்களை வெளிக்காட்ட சமயம் வாய்க்காமல் ஒருவன் உயர்ந்த எண்ணங்களை வெளியார் புகழாத நிலையு முண்டு.

ஆற்று வெள்ளம் அணி மணியைப் பார்க்கவொட்டா மல் வேகமாக அடித்துச் செல்வதுபோல உயர்ந்த எண்ண முடையாரைச் சேர்ந்தார் உயர் எண்ணம் வெளி வராமற் புரட்டி விடுகின்ற நிலையையும் காணலாம்.

சிறந்த வீர னொருவனைப் பலர் தாக்கிச் சித றடிப்பது போல மன ஆற்றலுள்ளாரை சிறு எண்ணமுள்ளார் பல் லாற்ருனும் விளக்க முருது உயர் எண்ணத்தை உடைத்து விடுவது முண்டு. மேற் கூறிய இவற்றின் றன்மை எல் லாம் நன் குணர்ந்தாராய் இருத்தலோடு பிற மக்களுக்கும் தமக்கும் நன்மை பயக்கும் நோக்க முடையாராய் மனத் தைப் பயிற்சி செய்தலே நன்மை யுண்டு பண்ணும். ஒளி யுள்ள மணியை விரும்பிப் பார்ப்பதுபோல நன் மனமுடை யாரை நாளும் விரும்பிப் போற்றுவர் என்பதில் ஐயமில்லை.

மின்சாரத்தின் ஆற்றலினுல் பல வீடுகளையும் பற்பல நகரங்களையும் ஒரே காலத்தில் விளக்க முறச் செய்தல்போல மனுே வாற்றலினுல் பற்பல குடும்பங்களையும் பற்பல ஊர் களையும் விளக்கமுற இயக்கலாம்.

மன நலமுடையாரைத் தீயோர் கண்டு அஞ்சுவர். அஞ்சாமல் ஓரமயத்தில் எதிர்த்தாலும் திண்மையுடைய கட்டுத் தறியினை யசைத்து அலுத்துப் போகும் கைம்மா வைப்போல, சும்மா கலங்கி யிருப்பதோடு பின்னுருக் காலும் வாய் திறவார்.

நன்னேக்க முடையா ராயின் பண்பட்ட பெரியோர் நன்மொழிக் கிணங்கி நலம் பல பெறுவர். மனத்தின் ஆற் றலினுலேயே மக்கள் பலர் போற்றுகின்றனர். மனத் திற னில்லா மக்கள் பெரும் பொருள் கிடைத்தாலும் அதன் பயனை யடையார்.

மனத் திறலுடையார்க்கு இடம் பொருள் ஏவல் இல் லாதிருப்பினும் இருக்கின்ற நிலைக்கு இருநில மக்கள் ஏற் பாடு செய்வர்.

மனத் திறல் இல்லார்க்கு இடம் பொருள் ஏவல் இருப் பினும் இல்லாத நிலையி லிகழப் படுவர்.

எதனை விரும்பிப் பல்கால் நினைக்கின்ருரோ அதனை யடைந்து விடுவார். புகழை விரும்பின் புகழ், பல பொறி களிலே (இயந்திரங்கள்) தம் பொறியை (மனத்தை)ச் செலுத்தினுல் பொறி வல்லவன் ஆவான். பற்பல புத்தகங் களை ஆராயின் ஆராய்ச்சி நிலை எற்படுகின்றது. இவற்றை யெல்லாம் விட்டு உயர் குணங்களையே நாடி உள்ளின் குணக்குன்ருய் ஆய்விடுகின்ருன். குற்றம் பல குறித்துத் திரியின் யாவரும் அஞ்சும் குற்றவாளியாய்த் திரிவான். ஆகையால் 'நினைப் பெல்லாம் வீண் ஆகா' இவற்றையெல் லாம் உள்ளடக்கியே நம் பொய்யா மொழியார் 'உள்ளுவ தெல்லாம் உயர் வுள்ளல்' என்றும் ஒள்ளிய மாணிக்க மணி விளக்கினுற் கொள்ளவைத்தார் என்க.

# ஆற்றின் நீரேகுவணி.

த. பு. நவநீதகிருட்டினன், அண்ணாமலைநகர்.

(முற்றொடர்ச்சி துணர் 23, மலர் 4, பக்கம் 89.)

நீரோடையால் வண்டல் அடித்துக்கொண்டு போகப்படல் என்ற நடைத் தோற்றத்தை (Phenomenon) யொட்டிய உழப்புழுவலின் (Dynamics) பட்டாங்கைக் காணற்கென, அவ் வண்டல் கொண்ட துகள்கள் ஒவ்வொன்றும், ஆற்றின் தரையினின்று நீரோடையில் ஏற்றப்படலைப் பொறுத்த முடுக்கு வயவையினுள் (Mechanism) ஆழமாய் நுழைந்து பார்த்தல் வேண்டும். நீரோடைத்துரப்புற்ற மண் துகள்கள் பல வளவின. பொதுவாக, அவை பெருந் துகள்கள், நடுத்தரத் துகள்கள், சிறு துகள்கள் என மூன்று வகைகளினவா யிருப்பன எனக் கொள்ளலாம், எவ் வகையின தாயினும், மண் துகளொன்று ஆற்றி னடித் தரையி லுள்ளபோது, அதன் மீதுள்ள நீர்ப் படலத்தின் சறுக்கலை யொட்டிய உரைதல் வலிமையால் உறுத்தப்படுகிறது. ஒன்றினை (Unit) யளவான பரப்பின் மீது உறுத்தப்படும் வலிமையி னளவு, நீரின் பாகு நீர்மையின் (Viscosity) அளவால், தரையிலான நீரோட்ட விரைவின் சாய்வுப்படி வீத வளவைப் பெருக்கலால் பெறப்படுவதாம். தனியான தொரு துகளை அச் சரிவு வலிமையானது தள்ள யியன்ற நெடுமையின் வரைவானது, அத்துகளுக்கும் மற்ற துகள்களுக்கு மிடையான ஒட்டு நசையின் (Cohesion) அளவையும், அத் துகள்களி னிடைப்பட்ட இடுக்குகளின் அளவையும் பொறுத்திருப்பது. இடுக்கி னளவை யொட்டியே மண்ணில் நீரூறும் தகவினளவு இருப்பது. அங்ஙனம் நீர் தோய்ந்துள்ள துகள் எளிதாய் தள்ளப்படலாம்; ஏனெனின், அதைச் செலுத்தும் வலிமையானது அதன் மேற் பரப்பைச் சறுக்கினவாறு மட்டும் உறுத்தப்படுவ தன்று; அஃது அத்துகளை அடித்துத் துரப்பும் வகையினது. துகளி னடிப் புறத்தும் நீரோட்ட மிருப்பின், மாக்னஸ் விளைவு (Magnus Effect) எனப்படும் இன்னொரு திற உய்த்து வலிமைக்கும் அத் துகள் ஆட்படுவதாகும். மாக்னஸ் விளைவுத் திறமான வலிமை அத் துகளை நீரோடையின் குறுக்கை நடுப்பகுதி வாட்டமாய் ஏற்றும் போக்குற்றது. அங்ஙனம் தரை மட்டத்தினின்று கிளப்பப்பட்டவாறாகியும், மண் துகளானது தரையால் தாங்கபபட்டிருக்கும். ஆனால், அதன் அடிப் புறமாய் நீரோட்டத்தால் அரிக்கப்பட்டு

வருகிறது. அடிப்புறத்தான நீரோட்ட விரைவினளவு, மீதான தினும் குறைந்திருக்கும். அவ்வாறான நிலைமையில் விரைவினளவு மிக்கதா யுள்ள வைப்பை நோக்கிக் குறுக்கை வாட்டமாய் வலிமை யுறுத்தப்படுவ தாகும். அஃதாவது அம் மண் துகளை மேலே உயரும் படி செய்யும் போக்குடைய வலிமை அதன்மீது உறுத்தப்படுகிறது. அவ்வாறான உயர்த்து வலிமையி னளவு மண் துகளின் கனத்தைப் பொறுத்த கீழிழுக்கும் வலிமையை விட மிக்கதா யிருப்பின், அத் துகள் எழும்பும். பெருந் துகள் களில் கீழிழுக்கும் வலிமையே மிக்கதா யிருப்பது. ஆதலால், அவை மேலுயர மாட்டாவாம். நடுத்தரத் துகள்களும் சிறு துகள்களும் மேலெழும்புவன. அடித் தரையினின்று மேலே யேற ஏற உயர்த்து வலிமையி னளவு குறைந்து கொண்டே போவ தாகும். ஆதலால், நடுத் தரமான மண் துகள்களை யொட்டி, ஓரளவான உயரத்தில் துகளின் கன வலிமை உயர்த்து வலிமைக்கு ஈடானதா யாகும். அதன் பிறகு அம் மண் துகள் மேலும் எழும்பாது. சிறு துகள்களைப் பொறுத்த கன வலிமை மிகக் குறைந்ததே யானமையின், அத் துகள்கள் நீரின் மேல் மட்டம் வரை கூட உயரலாம். மண் துகள் உயர்ந்து வந்து கொண்டுள்ளபோதே, அது நீரோட்டத் தின் பாட்டையி னுன வயங்கலும் கொண்டிருப்பது. ஆதலால் அதன் எழுமையும் நெடுக்கைப் படர்வும் ஒருங்கிட லான வைப் புக்கு வரல் வேண்டும். ஆனால், அவ்வாறு வருங்கால் அவ் விடத் தைத் தாண்டி விடுகிறது. எனவே, மேற்போக்கான உய்த்தும் வலிமை யுறுத்தப்படாத தாகி, தரைக்கே மீட்டும் விழுகிறது. அங்கிருந்து மீட்டும் உயர்ந்து மீட்டும் விழுகிறது. அவ்வாறே தொடர்ச்சியாய் எழும்பி விழுந்துகொண்டே அது செல்வதாகும். தரையினின்று எழும்ப வொல்லாமல் ஆங்கே தங்கிவிட்ட பெருந் துகள்கள் நீரோட்டத்தின் போக்கில் தள்ளப்படுகின்றன. ஆகவே, பெருந் துகள்க ளானவை அடித் தரையின்மீது உருட்டப் பட்டவாறு அடித்துககொண்டு போகப்பட, நடுத்தர மானவை நெடுக்கையில் தாவித் தாவிக் குதித்துக்கொண்டே நீரோட்டத் தில் போகின்றன. சிறு துகள்கள் நீரோட்டத்தில் தொங்கு இருக்கை யான வாறு (Suspension) இயங்குவன.

நீரியக்கவணி சார்ந்த அமைவலவர் கருத வேண்டிய செய்திகள், தொங்கு இருக்கையானவாறு அடித்துக் கொண்டு போகப்படும் சிறு துகள்களைக் கொண்ட வண்டல் வகையைப் பற்றினவையே. அவ்வாறு கடத்தப்படும் வண்டலின் ஈட்ட வளவைப்பற்றி அவர் கருதல் வேண்டும். அவ் வளவையானது, ஆற்றின் தரை மருங்கிலான வாய்ப்புத் தகவுகளைப் பெருமடங் குக்குப் பொறுத்திருப்பது. அவ்வாறான பொருத்தத் திட்டங்கள்

பின் வருமாறும் :

(1) நீரோட்டத்திற்குக் குறுக்காயுள்ள விரைவு மாற்ற வீதம்; முக்கியமாக தரையுழியில் விரைவி னளவு.

(2) கொந்தளிப்பின் தரப்படி யளவு (Degree)

(3) கடத்தப்படும் வண்டலின் திரட்சி யளவு. வண்டல் கொண்ட மண் துகள்களின் பொதுவான பரு வளவும், வடிவத் தகவும், செறி வளவும்.

(4) தரையின் கோட்ட வடிவப் பான்மையும் (Configuration), சாய்வு வீதமும், சரவை யியலும் (Roughness)

இயற்கையி லான நீரோடை யொன்றில் அத் தகவுகள் ஒன்றுடனொன்று இடையிட்ட வாறு யிருப்பன. ஆதலால், அவை ஒவ்வொன்றும் தனியாக எவ்வாறான விளைவுகளுட னிருப்பன என வகையீடு செய்தல் இயலாது. ஆயினும், சோதனை மன்றத்தில் அவ்வாறான தகவுகள் ஒவ்வொன்றையும் ஒட்டிய விளைவுகளைத் தனித்தனியே காணலினின்று அவை ஒருங்கிடலான போதுள்ள விளைவுகளில் ஒவ்வொன்றும் எவ்வெவ் வண்ணமாய்த் தலையிடுவ தாகும் என்பதை அறியலாம். அமை வலவரது தொழிலை யொட்டி அன்னார் முக்கியமாய் அறிய வேண்டிய செய்தியானது, நீரோடையின் போக்கி லான ஓரிடத்தில் குறித்த வளவான பொழுதினுள் எத்துணையான வண்டல் திரட்சி நீரோடையி னேற்றாய்க் கடத்தப்படுகிறது என்பதைப் பொறுத்ததே யாம். அவ் வளவைச் செய்திகள் இரு வகைக் கருவிகளின் துணைகொண்டு அறியப்படுவன. ஒரு வகையான கருவி நீரோட்டத்தின் விரைவை அளவிட உதவுவது. மற்றொரு வகையானது நீரின் கொந்தளிப்புத் தகவை அளவிடத் துணை தருவது. இரண்டாம் வகையான கருவிகளில் பல கையாளப் படுவன. அவ்வாறான கருவிகளில் ஒவ்வொன்றா யானவை, முறையே, தக்கவாறான பல வளவு ஆழங்களில் வைக்கப்படுவன. இருவகைக் கருவிகளையுங்கொண்ட நிலையங்கள் பல, நீரோடையி லான வயின்கள் பலவற்றில் நிறுவப்படுவன. அவ்வாறே பல நீரோடைகளில் அவை அமைக்கப்படுவன. அந் நீரோடைகள் பலவும் 'நீர்ப்பாகிடுக் கோட்டம்' (Water Shed) என்றதுடன் தொடர்பா யிருப்பன. 'நீர்ப்பாகிடுக் கோட்டம்' என்ற நீர் நிலையானது, பல ஓடைகளி லான நீர்ச் செலவுகளைப் பிரிக்கும் வரைவுகளைக் காட்டுவது. நீரோடைகளிடையான நிலையக் கருவிகளினின்று பெறப்படும் அளவைகளையும், நீர்ப்பாகிடுக் கோட்டத்தில் விழும் மழையின் பெயலளவையும், மண் தகவுகளின் அளவுகளையும் கொண்டு, அவற்றினுக்கும் நீரரிப்பால் அகற்றப் படும் வண்டல் திரளி னளவுக்கு மான தொடர்பை அறியலாம்.

இதுகாறும் கூறப்பட்ட செய்திகள், ஆறு சார்ந்த அமை வலவரையே யன்றி, பண்ணை சார்ந்த விளைஞரையும் பொறுத் தவை. அளவு கடந்த சாகுபடியாலும் நிலத்திற்கு உரமிட்டுக் கட்டாமையினுலும், பழனங்களா யிருந்த நிலப் பகுதிகள் பயிரி டற்குத் தகுதியற்றனவா யாகி இழக்கப்படுகின்றன என்பதை எல்லோரும் அறிவர். எருவடித்தலை யொட்டி நிலம் வளமிக்கதா யாதலுடன் கூட, எருவிலுள்ள உறவித் தகவான முறிப் பூஞ்சின் துணைகொண்டு நீரறுப்பைத் தகைக்கும் உரமுற்ற தாயும் ஆகிறது. தட்ப வெப்ப நிலைகளையும், மண் தகவுகளையும் பொறுத்து நீரரிப்புத் தகவுகள் எவ்வாறு யிருப்பன என்பதை யொட்டிய அளவை ஒப்புரவான சோதனைகள் இன்று செய்யப் பட்டு வருகின்றன. அமெரிக்க ஒற்றுமைத் தண்ணடைகளில் பயிர்த்தொழிலாட்சிப் பிரிவினை வாரத்தின் (Department of Agriculture) பாற்பட்ட மண்புலக் காப்புப் பணி நிரையினோர் (Soil Conservation Service) நாட்டின் பல்லொரு பாங்கரையும் ஒட்டி நீரறுப்புத் தகவுகள் அளவை முறையினுய் ஆராயப் படற் கான சோதனைத் திட்டங்களை வகுத்து அவ் வாராய்ச்சிகள் ஆங்கெலாம் செய்யப்படுமாறு கண்காணித்து வருகின்றனர்

மண்புலக் காப்புப் பணி நிரையினோர் வகுத்துள்ள திட்டத் தின்படி யான சோதனைகள் முக்கியமாக இரு திறங்கள் பாற்பட்டவை, ஒரு திறமான சோதனைகளின் கண், நேரொழுங் குடன் சாய்ந்த பாங்கர்களின் மீது விழும் மழையின் பெய லளவுக் கும், ஆங்கான மண் அதனின்று பற்றும் ஈரத்தி னளவுக்கும், மழை நீரால் நிலத்தினின்று அடித்துக்கொண்டு போகப்படும் வண்ட லீட்டத்தின் அளவுக்கு மான தொடர்புகள் ஆராயப் படுவன. மற்றொரு திறமான சோதனைகளை யொட்டி, தக்கவாறு அமைக்கப்பட்ட மண்ணரங்கின் (Terrain) மீது விழும் பெயலி னின்று வடிந்தோடும் நீரி னளவுக்கும் அவ் வரங்கைச் சூழ்ந்தபடி அமைக்கப்பட்ட நீர்ப்பாகிடுக் கோட்டத்தின் மீது விழும் மழையின் பெய லளவுக்கு மான தொடர்புகள் காணப்படுவன. அவற்றை யொட்டி மண்புலக் காப்புக்கான திட்டங்களின் நிறை வேற்றுத் தகுதிகள் (Efficiencies) அறியப்படுவன.

முதல் வகையான சோதனையை யொட்டி வய லொன்று சிறு சிறு பட்டைப் பாத்திகளாய்ப் பிரிக்கப்படுகிறது. ஒரு பாத்தியானது அடுத்ததற்குச் சற்று இறக்கமாயானவாறு, அவை முறையே, அமைக்கப்படுவன. அங்ஙனம், அப் பாத்திகள் சற்றுச் சாய்ந்துகொண்டே போகும்படியான இடவையில் பொருந்தியிருப்பன. சாய்வி னடிப் பகுதியில், அதன் வழியே வடியும் நீரைக் கடத்தற் கான சுருங்கை யொன்று செங்கல்லால்

கட்டப்படுகிறது. ஆங்கினின்று அச் சுருங்கையானது பெரும் சதுரத் தொட்டி யொன்றை அடைகிறது. அச் சுருங்கையில் பாயும் நீரானது தொட்டியை நிரப்பும். தொட்டியின் மேற் புறத்தினின்று அந் நீரானது கீப்பு பிரித்தி (Gied Divisor) என்ற வகையான வட்டிலின் வழியே யோடி வட்டத் தொட்டி யொன்றினுள் பாய்கிறது 'கீப்பு பிரித்தி' என்றது, நிற்கை வாட்டமான சந்துகள் பல விட்டவா றுள்ள பொருந்தல், அந்தச் சந்துகளில் நடுவிலமைந்த தொன்றைத் தவிர மற்றுனவற்றின் வழியே செல்லும் நீரானது கழிவாயிலை அடையும். நடுச் சந்தின் வழியே சென்ற நீர் மட்டும் வட்டத் தொட்டியினுள் பாய்வ தாகும். பாத்திகளினின்று நீரடித்துக் கொண்டு வரும் பரு மணல்கள், பரல்கள் முதலானவை சதுரத் தொட்டியின் அடிக்கு இறங்கினவாறு அதிலேயே தங்கி வீடுவன. வட்டத் தொட்டியில் பாயும் நீரானது சிறு துகள்களான வண்டலை மட்டுமே கொண்டிருக்கும். அவ் வண்டலானது அத் தொட்டியி னடியில் படிகிறது. பெரும் பெயல்க ளானவை ஒவ்வொன்றும் பொழிந்த பிறகு, முறையே, வயலினின்று வடிந்த நீர் தொட்டிகளில் அங்ஙனம் பிடிக்கப்படுகிறது. வட்டத் தொட்டியி னடியில் படியும் வண்டல் திரட்சி ஒவ்வொரு தடவையும், முறையே, நிறுக்கப்படுகிறது. பெயலி னளவுக்கும், அது பொழிந்த நீர் அடித்துக்கொண்டு வந்த வண்ட லீட்டத்தின் நிறைக்கு மான தொடர்பு அறியப்படுகிறது. பருமணல், பருக்கைக் கல்கள், இன்னோ ரன்னவை வயலினின்று அகற்றப்படலை யொட்டி விளைஞர் பயன் இழந்தவரா யாகார்; சிறு துகள்கள் தெகுண்ட வண்டல் அடித்துக்கொண்டு போகப்படலை யொட்டியே நிலத் தகவு கேடுறு மாதலால், அவ்வாறுன கடத்தலைப் பொறுத்தே விளைஞர் இழந்தவரா யாவார். எனவே, வண்டலின் நிறையை அறிதலே அவர்க்கு முக்கியமாம்.

மண்புலக் காப்பைப் பொறுத்த இரண்டாம் வகையான சோதனைத் திட்டங்கள், நீர்ப்பாகிடுக் கோட்டத்தினின்று வடிந் தோடும் நீரை அளவிடலை யொட்டியவை. அவ் வாராய்ச்சி களின் நோக்கமானது, மண்ணின் நீர்ப்பற்றுத் திறனை மிக்க தா யாக்கற் கான வழிகளையும், நீரறுப்பின் அளவைக் குறைத்தற் கானவழிகளையும் காணல் என்பதே. பரந்தநீர்ப்பாகிடுக் கோட்ட மொன்றினின்று வடியும் நீரெல்லாம் ஒரே வாய்க்காலின் வழியே செல்லும்படி அமைக்கப்படுகிறது. அவ் வாய்க்காலின் குறுக்கே அணையொன்று கட்டப்படுகிறது. அணையின் மேற்பகுதியில் V. என்றதன் வடிவமான திறப்பு வெட்டப்படுகிறது. அணையால் நீரானது தேக்கப்படும் இடத்தில் தக்கவாறுன கருவி யொன்று ஊன்றப்படுகிறது. அக் கருவியானது நீர் மட்டத்திலேயே

அமைந்து வரும் மிதவை யொன்று நொடிக்கு நொடி எத்துணை யானஆழத்திலிருப்பது என்பதை இடையருது குறித்துக் கொண் டிருக்கும். அவ் வணையின் வடிவங் கொண்ட சிற் றள வான அணையொன்று சோதனை மன்றத்தில் அமைக்கப்படும். அதை யொட்டி செய்யப்படும் அளவைகளினின்று மிதவை யமைந்து வரும் ஆழங்கள் ஒவ்வொன்றையும் ஒட்டிய அணைப்புறத்தான நீரோட்ட விரைவி னளவுகள் அறியப்படுவன. அவற்றை அறிதலால் அணையை அடையும் நீரி னளவைக் கணக்கிடலாம் நீர்ப்பாகிடு கோட்டத்தில் மழை பொழிதலை யொட்டிய பெயலி னளவு அறியப்படுவது. ஆதலால், அக் கோட்டமானது எத்துணை யான நீரை மழையினின்று பெற்றது எனக் கணக்கிடலாம். இவ் வளவைக்கும் அணையை அடைந்த நீரின் அளவுக்கு மான வேற்றுமையளவே, மண்புலத்தின் கழுமலான நீரின் அளவாம் என்பது தெளிவு. அணைமீதான திறப்பில் பொருத்தப்படும் கருவிகள், அவ்வழியே செல்லும் வண்டல் திரளின் அளவைக் குறிப்பிடுவன.

நீரோட்ட விரைவை மட்டாக்கும் பொருட்டா யானவை உரசல்களையே யன்றி வேறெவையாயு மில்லாவிடின், நீரறுப்பு கடுமையா யிருக்கும் எனக் காண்கிறோம். அந் நிலைமையில் நீரோட்டத்தை யொட்டிய சரிவு வலிமை முழுதும் மண் பரப்பின் மீதே உறுத்தப்படுவ தாகும். நிலத்தில் புற் பூண்டுகள் அடர்த்தி யாய் முளைத்திருப்பின், ஆங்கு நீரோட்டத்தின் விரைவி னளவு உரசலுடன் கூட வேறு வகையான எதிர் வலிமைகளையும் ஒட்டி குறைக்கப்படுவ தாகும். விரைவி ளவைக் குறைக்கும் சரிவு வலிமையானது பயிர்களின் மேற் பகுதிகளால் ஏற்கப் படும்; அதை யொட்டிச் சேத முண்டாகாது. நீர்ப் பரப்பில் நீரோட்ட வளவு குறைதலால் அந் நீர் மண்ணில் ஊறி யிறங்கி வேர்களை அடைதற்கான வாய்ப்பு மிகுதி யாகும். ஆனல் பயிர்கள் ஓங்கியும் அடர்ந்தும் இருப்பின் நீர்த் தேக்கம் ஏற்படும். ஆதலால், நிலமானது அளவு கடந்த ஈர மூறி கேடுற்ற தாகும். ஆகவே, அமைவலவர் வேண்டுவது, நிலப் பரப்பிலான சரிவு வலிமை குறைந்தபடியும், நிலத்தினுள் நீர் ஊறும்படியும், மிக்க வளவான நீர் வடிந்துவிடாதபடியும், அமைத்தற்கான திட்டங் களைக் காணல், என்பதே. ஆற்றை யொட்டி அவ்வாறான

திட்டம் அமைத்தல் இயலும். ஆற்றில், ஒன்றினின்றொன்று சிறிதளவு சேய்மையி லுள்ளவாறுக் குட்டையான அணைகள் பல தொடர்ச்சியாய்க் கட்டப்படுவன. அவ்வாறாக ஆற்று நீர் சிறிது சிறிதாய் இறங்கிச் செல்லும் படிக்கட்டு அமைப்பு ஒன்றின் வழியே செல்லும்படி யாகிறது. ஆற்றில் நீர்ப் போக்கு தடைப் படுவ தில்லை. ஆனால், ஒவ்வோரிடத்திலும் தரைமீது மெல் லெனவே பாய்வ தாகும். ஐரோப்பாவில் பல நாடுகளில் அவ் வாறான சாதனங்கள் ஆறுகளில் செய்யப்படுகின்றன.

நீர் வளமும் நில வளமும் தமிழ்ப் புழக்கம் ஊறின சொற் கள். அவ் வளங்களை வழங்கும் ஆற்றின் சிறப்பைத் தமிழர் நன்கு அறிந்தவர். ஆற்றின் நீரேகுவணியைப்பற்றி தெரிந்துகொள்ளும் ஆவல் மிகுந்து அன்னார் இருத்தல் இயல்பே யன்றோ? அவரது அவாவானது நுண்ணளவேனும் ஈடேறும்படி, யான் இக் கட்டுரையை வரைந்தேன். ஆயினும் நீரேகுவணியைப் பொறுத்து தெரியற்செய்கை வழியே அறியப்பட்டுள்ள செய்திகளில் மிக நுண் பங் கானவையே நான் கூறினவை. யான் எடுத்துரைக்க வேண்டியவை எனத் திட்டஞ் செய்த செய்திகளை, தேர்ந்தெடுத்த தமிழ்ச் சொற்களைக்கொண்டு தெரியற் செய்கையின் செப்பத் திருத்த ஒப்புரவு வழுவா வண்ணம் புகல முயற்சி செய்துள் ளேன். எனினும், தெரியற் செய்கையை மேலோட்டமாகவே யாயும் செந்தமிழை நுனிப் புல் மேய்ந்தவாறுயுமே கற்றுள்ள அடியேனது முயற்சியின் விளைவான வெளியீடு யான்கொண்ட குறிக்கோளுக்கு ஏற்றதாயானதினும் மிகத் தாழ்ந்ததாகவே யிருப்பது என்பதைப் பணிவுடன் ஒப்புக்கொள்கிறேன். செந் தமிழொண்மை, தெரியற் செய்கைத் தெருட்சி என்ற இரு விரி புலங்களிலும் ஆழ்ந்து நுழைந்து, அவைகொண்ட திணைகள் பலவற்றையும் திட்டமாய் அறிந்துகொண்ட ஆன்றோர் இயற்றும் தெரியற் செய்கை ஆக்கங்களைத் தமிழ் வாயிலாய்க் கற்று இன் புறலாம் என எதிர் நோக்கின நன்னம்பிக்கை கொண்டு யான் பிழைத்திருக்கிறேன். எனது எட்டு நிறைவேறும்படி தமிழணங்கு அருள்புரிவாளாக.

# உரிமை வாழ்வில் இலக்கியப் பணி.

வித்துவான். ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை,
அண்ணுமலைநகர்.

உரிமை வாழ்வென்பது பொது வுலகில் 'சுதந்தர வாழ்வு' என்று வழங்கும். இந்த வாழ்வு பெறுவதற்கு நம் நாட்டவர் சென்ற நூற்றுண்டின் இறுதியிலே முயலத் தொடங்கி, இந்த நூற்றுண்டின் இந்த ஆண்டு வரையில் பெரிய போராட்டத்தைச் செய்து வெற்றி பெற்றனர். இத்தகைய வெற்றி, உரிமைப் போருடற்றி வெற்றி பெற்ற நாடுகள் எவற்றிலும் இதுகாறும் உண்டானதே கிடையாது. ஏனை நாட்டவரால் எய்துதற் கரிய தாகிய இத்தகைய வெற்றிகொண்டு விளங்கும் நமக்கு வேறு எவருக்கும் இல்லாத சிறப்பு உண்டாகிறது. மேலும், நம் நாட்டிலும், இறந்த ஆண்டுகளில் வாழ்ந்தவர்களிலும், எதிர் காலத்தில் தோன்றுகின்றவர்களிலும் இன்றைய நாம் நல்ல பேறுடையவர்கள் என்பதையும் நினைவுகொள்ளவேண்டும். உரிமைப் போர் நிகழ்ந்த காலத்தில் உடனிருந்து கண்டு, அஃது எதிர்பாராத வகையில் வெற்றி தரவும் கண்டு இன்புறுகின்ருே மாகையால், நாம் பெற்ற பேறு தலைசிறந்த பேறு என்பதில் தடை ஏது?

உரிமை வாழ்வு எய்தப்பெற்று இன்புறுகின்ற நமக்கு இவ் வாழ்வு உரியது தானு? புதிது பெற்றதொரு வாழ்வா? என்று சிறிது எண்ணமிட்டுப் பார்க்கலாம். தமிழ் நாட்டின் வரலாறு காண்பவர்க்கு, 'தமிழ் நாட்டவர்க்கு இது புதிதன்று; மூந்நூறு நானூறு ஆண்டுகட்கு முன்பு வரையில் தமிழ் நாட்டவர் உரிமை வாழ்விலே உறைந்தவர்' என்பது நன்கு விளங்கும். 'தமிழ ராகிய நமக்கு இறந்த உரிமை வாழ்வு மீள உயிர்பெற்று வந்திருக்கிறது' என்றே எண்ண வேண்டும்.

பேச்சுரிமை, வழிபாட்டுரிமை, அச்சமின்மை, வறுமை யின்மை, ஒப்புரவு ஆகிய ஐந்தும் உரிமை வாழ்வுக்குச் சிறந்த உறுப்புக்களாகும். அவரவரும் தத்தமக் குரிய நெறியில் நின்று நெஞ்சால் நினைப்பவற்றைச் சொல்லுதற்குத் தடை யில்லாமை பேச்சுரிமையாகும். நெறியில் நிற்கும்போது நில்லாதார் செய் யும் நீர்மை யற்ற செயல்களை எடுத்தோதித் திருத்துவதற்கும், நெறியிடை யுண்டாகும் இடையூறுகளையும் இடையீடுகளையும் எடுத்தோதி விலக்குதற்கும், நலங்களை எடுத்தோதிப் பாராட்டு

தற்கும் பேச்சு நிகழும். அவ்வாறு நிகழும் பேச்சுக்களை வழங்கு தற்கு ஒவ்வொரு மகனுக்கும் மகளுக்கும் உரிமையுண்டு. அப் பேச்சுரிமை யில்லாத வாழ்வு உரிமை வாழ்வாகாது.

கடவுள் ஒருவர் உண்டென்றும், அவரை வழிபடுவது கட னென்றும் கருதி அவரவரும் வேறு வேறு சமய நெறிகளை வகுத்துக் கொண்டிருக்கின்றனர். இதனால் சமய நெறிகளும் பலதிறப்படுகின்றன. அவர்களுக்கு அந் நெறியில் வழிபட்டு வாழ வுரிமை யுண்டு. இது வழிபாட்டுரிமை. அவ் வுரிமை யைக் கெடுத்து, யாவரும் ஒரு நெறியையே கடைப்பிடிக்க வேண்டுமென வற்புறுத்தி நிறுத்துவது உரிமை வாழ்வுக்குப் புறம்பானதாகும். அவரவர்க்கும் தாம் தாம் மேற்கொண் டொழுகும் வழிபாட்டுச் சமய நெறியைப் பிறர்க்கு எடுத்தோத உரிமை யுண்டு. பிறரைத் தம் நெறியைக் கைவிடுமாறு வற் புறுத்துவது உரிமைப் பணியாகாது.

உடைமைக்கும் உடையவனுக்கும் உள்ள உரிமையால், உடைமையின் பயனை உடையவன் நுகர்தற்கண் அவனுக்கு அச்ச முண்டாதல் கூடாது. உழைப்பவனுக்குத் தன் உழைப்பால் விளையும் பயனை நுகர்தற் குரிமை யுண்டு; அந் நுகர்ச்சியில் அவனுக்குத் தடை யுண்டாகுமோ என அச்ச முண்டாதல் கூடாது. இவ் வகையால் அவரவர் உரிமையில் கேடுண்டாகுமோ என அஞ்சும் அச்சம் உரிமை வாழ்வுக்குத் தீதாகும். இம் முறை யில் அரசியல் முறைகளும், அவற்றைச் செயற்படுத்தும் வினை யாளர்களும் மக்கட்கு அச்சம் பிறவாத வகையில் அமைவதே அச்சம் இல்லாமை யாகும்.

உரிமை வாழ் வுடைய நாட்டில் வறுமை யுண்டாகு மானால், அஃது அவ் வுரிமையை யழித்து நாட்டைச் சீரழித்துவிடும். 'நாடென்ப நாடா வளத்தன நாடல்ல நாட வளந் தரும் நாடு' என்றதும் இக் கருத்தையே வற்புறுத்துகிறது. வறுமை யறவே இல்லாத உரிமை வாழ்வில், ஒரு வேலையும் இன்றிச் சோம்பித் திரிபவர் இல்லையாவர்; அவரோடு, உழைப்பார் உழைக்க, அவர் உழைப்பின் பயனை உறிஞ்சி யுண்டு உயிர்வாழ விரும்புவோர் ஒழிந்துபோவர். 'யான் வாழ ஏனோர் எனக்கு அடிமையாக எனும் ஊன அறிவு' ஓரிடத்தும் ஒரு சிறிதும் இராது.

ஒப்புரவு என்பது உரிமை வாழ்வுக்கு அழகு தருவ தாகும். நாடுகளுக்கிடையே நிலவும் ஒப்புரவு, வறுமையும் அச்சமும் போக்கி, உரிமை வாழ்வில் ஊறிப் பெருகும் இன்பத்தை நுகரப் பண்ணும். நாட்டு மக்க ளிடையே

விளங்கும் ஒப்புரவு, மக்கட் சமுதாயத்தில், வேற்றுமைசெய்யும் பிளவுகளைப் போக்கி, ஒற்றுமை நிறுவும் மனப்பண்பினை வளர்க்கும். ஒப்புரவு என்பது ஒருவருக்கொருவர் வேண்டுவன வுதவி யொழுகும் ஒழுக்கமுறை; 'ஒப்புரவொழுகு' என்பது ஆத்திசூடி. மக்களை ஒருவர்க்கொருவர் ஒன்ருகப் பிணித்து ஒருமை யுறுவிப்பதும், நாடுகளை ஒன்றோடொன்று நீங்கா வகையில் ஒன்றுபட்டு வாழ வைப்பதும் ஒப்புரவென்னும் ஒள்ளிய அறம் ஒன்றேயாகும்.

மேற்கூறிய பேச்சுரிமை முதலிய ஐவகை யுறுப்புக்களையும் கொண்டு, பிற நாட்டவரது ஆட்சியின் கீழன்றித் தன்னாட்டவ ராளும் ஆட்சியில் வாழும் வாழ்வு உரிமை வாழ்வுக்கு உருவாகும். இன்று நாம் எய்தி இருக்கும் உரிமை வாழ்வு இத் தகைய தாகும். இந்த உரிமை வாழ்வு பல நூற்றுண்டுகளுக்கு முன் நம் தமிழகத்தில் இருந்ததென்பதைச் சங்க நூல்கள் எடுத்துரைக்கின்றன. தமிழகத்தைத் தமிழரே ஆண்டனர்; அவரது தமிழ் மொழி அரசியல் மொழியாக விளங்கிற்று. தமிழர்கள் அத்தமிழ் ஆட்சியின் கீழ் வாழ்ந்தனர். அவர் வாழ்வில் இவ்வுறுப்புக்கள் ஐந்தும் குறைவின்றியே இருந்தன. அதனுல் அவர்கள் காலத்து இலக்கியங்கள் இவ்வைந்தும் வளம் பெறத் தக்க கருத்துக்களை எடுத்துக் காட்டின.

முதற்கண் பேச்சுரிமையைக் காணலாம். தமிழகத்தில் சங்க இலக்கியக் காலத்தில் நிலவியது முடியாட்சியே யன்றிக் குடியாட்சி யன்று. ஆயினும், முடியாட்சி, தான்தோன்றி யாட்சி யாய் இல்லாமல், குடிகளின் மனக்கருத்தைத் தழுவிச் செல்லும் இயல்பு பெற்றிருந்தது. இதனுல், அரசியலில் உரிமை அறிவுடையவர்க்கே இருப்ப தாயிற்று. பாண்டி வேந்தன் ஒருவன், 'ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும், மூத்தோன் வருக என்னது, அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்' என்றுன். திருவள்ளுவரும், 'குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன், அடிதழீஇ நிற்கும் உலகு' என்றுர். குடிக ளாவார் கற்ருரும் கல்லாரும் என இரு திறப் படுவர். அவருள், கல்லாதவர் கற்றவர் வழி நிற்பவராகையால், அரசியலின் செம்மைக்குக் கற்றறிந்த அறிவுடையோர் பொறுப்புடைய ராயினர். அப் பொறுப்பு, அரசியலில் வேண்டுவன எடுத்தோதற்கு வாய்ப்பளித்தது. சான்றோர் பலரும் பொறுப்புணர்ந்து தமது பேச்சுரிமையை நெகிழ விடாது செய்வன செய்து சிறப்புற்றனர்.

நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன், பாண்டி நாட்டை ஆண்டு வந்த காலத்தில், ஒருகால் நாட்டில் உணவுப் பொருள்

விளைவு குறைந்தது. உணவில் வறுமை யுண்டாயிற்று. வேந்தன் துறக்க இன்பம் வேண்டி வேள்வி செய்வதிலும், பெருஞ் செல்வம் ஈட்டிப் பிற வேந்தரோடு போர் செய்வதிலும், வேறே நல்ல புகழ் பெறக் கருதி அதற்குரிய செயல்களிலும் பெரிதும் ஈடுபட்டிருந்தான். உணவு முட்டுப்பாட்டைச் சிறிதும் உணராது, அதனை எடுத்தோதுபவர்களை இகழ்ந்து நின்றான். உணவுப் பொருளை மிகுதிப் படுத்துவது குறித்து வேந்தன் கருத்துச் செலுத்தா திருப்பதைக் குடபுலவியனார் என்னும் சான்றோர் கண்டார். அவரோர் அறிவுடைய சான்றோர் என்பதும், அவர்க்கு அரசியலில் பொறுப்புண் டென்பதும் வேந்தன் முதலாயினர்க்குத் தெரியும். அவர் வந்து வேந்தனைக் கண்டபோது, வேந்தன் அவர் சொல்வது கேட்க இசைந்திருந் தான். அவர்,

மல்லல் மூதூர் வய வேந்தே!
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலங் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ யாகல் வேண்டினும், சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினும் மற்றதன்
தகுதி கேள், இனி, மிகுதி யாள!
நீர்இன்று அமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே.
உண்டி முதற்றே உணவின் பிண்டம்.
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே.
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே

என்று சொல்லி, நீர் கொண்டு நிலத்தை வளம் படுத்துவது உயிர்களைப் படைப்பதாகும் என்ற கருத்தை வேந்தன் மனத்தில் பதியவைத்தார். 'ஏனை நாடுகளைப் போலப் பாண்டி நாடு பேராறுகளையுடைய தன்றே; இதனை நீர் வளமுடைய தாக்குவது எங்ஙனம்? என்று எண்ணுமை கருதி, நம் நாட்டில் உள்ளவை பெரிதும் புன்செய்க ளாகும்.

வித்திவா னோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்பிற் றாயினும் நண்ணி ஆளும்
இறைவன் தாட் குதவாதே; அதனல்
அடுபோர்ச் செழிய! இகழாது, வல்லே
நிலன் நெளிமருங் கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளா தோரே

என்றூர். இதனுல், புன்புலம் பயன்படாது; பள்ளப் பாங்கு நோக்கி நீர்நிலே யமைப்பின், அந்த நீர் நன்புலம் பெருகிப் பெரு நலம் விளேக்கும் என்று வற்புறுத்திஞர். அன்று குடபுலவியனு ரது பேச்சு நலம், இன்றும் பாண்டி நாடு நீர் நிலேகளால் மிகுந்து ஓரளவில் உணவுக் குறை வின்றி யமைதற்கு ஏது வாயிற்று.

சோழ நாட்டை உறையூரிலிருந்து ஆட்சி புரிந்த சோழ வேந்தருள் கிள்ளி வளவன் என்பவன் ஒருவன். இவன் முடிவில் குளமுற்றத்து நடந்த போரில் வீழ்ந்து இறந்ததுபற்றிப் பிற் காலத்தார், இவனேக் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்று கூறுவர். இக் கிள்ளிவளவன் ஆட்சியில் "குடிதழீஇக் கோலோச்சும் இயல்பு" குறைவ தாயிற்று. பிற வேந்தருடன் போர் செய்து வென்றி பெறுவதால் உண்டாகும் விளக்கமே வேந்தன் கருத்தை விழுங்கிக்கொண்டது. உழு படையினும் பொரு படையே வலி யுடையதெனச் சோழன் கருதிவிட்டான். இதனுல் குடிகட்கு வருத்தம் மிகுந்தது. இதனே எடுத்துரைக் கும் உரிமையுடைய சான்றேர் கருத்தில் அச்சம் குடி கொண்டது. அக் காலத்தே வெள்ளேக்குடி யென்னும் ஊரின ரான நாகனுர் என்னும் சான்ரேர் தோன்றி இக் கிள்ளிவள வனேக் கண்டார். "வேந்தே, பொருபடை தரும் வெற்றி குடி களின் உழுபடையால் விளேவதாகும்; குடிகளின் மன வியல்பை நீ நன்கறிதல் வேண்டும். அவர்கள்,

மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையில் தோன்றினும்

வேந்தரையே பழிப்பர்.

அதுநன் கறிந்தனே யாயின் நீயும்,
நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடு புறந்தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவை யாயின்,
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே

என்று அறிவுறுத்திஞர். வளவன் அறிவு தெளிந்து செய்வன செய்தான் பிறகு நாடு நாடாயிற்று.

பாண்டி நாட்டை யாண்ட வேந்தருள் அறிவுடை நம்பி யென்பவன் ஒருவன். இவன் பெயரளவில் அறிவுடைய நம்பியே தவிரச், செயலில் அறிவுடைந்த நம்பி யாவன். இவன் ஆட்சிக் காலத்தே, இவன் இன்பத் துறையில் மிக எளியனுய் ஒழுகினுன். இவனேச் சூழ்ந்திருந்த அரசியற் குழுவினர் நீர்வழிக் கோரை போல இவன் எண்ணப்படியே ஒழுகினுர்கள். நாடு

வேந்தனுக்கேயுரியது; அதனுல் அதன்கண் விளைவன அவனுக்கே உரியவை; அவற்றை அவன் விரும்புகிறபடியே செய்ய உரிமை யுண் டென்று சொல்லிக் குடிகளைப் பலவகையிலும் அலைக்கத் தொடங்கினர். அதனுல் நாட்டில் மக்களுக்கு மிக்க வருத்தமுண்டாயிற்று. அதனை யறிந்த பிசிராந்தையார் என்னும் சான்ருேர், வேந்தனை யணுகி, 'வேந்தே, நின் பட்டத்து யானைக் கெனத் தனியே நிலம் விடப்பட்டிருக்கிறது. அதன்கண் விளையும் நெல் அதற் குரியதே. அதனை விளைத்து நெல் லாக்கிக் குற்றி யரிசி யாக்கி, கவளம் கவளமாகத் தரின், அந்நெல்லுணவு அதற்குப் பன்னுளைக்கு உண வாகும். அந் நிலம் யானைக் குரியதே; அதனுல் அவ் யானையை அந் நிலத்தே விட்டு மேய விடுக என்று சொல்லிவிட்டால் என்னுகும்? நூறு வேலி நிலமாயினும், அதன் வாய் புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும். அதுபோல, நீயே சென்று நில வருவாய் கொள்ளத் தொடங்கின் நாடு பாழ்படும்; அது செய்யற்க' என்ற கருத்தமைய,

காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னுட் காகும்
நூறுசெறு வாயினும் தமித்துப்புக் குணினே
வாய்புகுவத னினும் கால்பெரிது கெடுக்கும்.
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்;
மெல்லியன் கிழவ னுகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானைபுக்க புலம்போலத்
தானும் உண்ணுன் உலகமும் கெடுமே

என்று அறிவுறுத்தினர்.

இவ்வாறு பேச்சுரிமையின் நயமறிந்து சான்ருேர் அவ்வப்போது வேந்தர்க்குத் தகுவனவற்றை அறிவுறுத்தி வந்ததனுல் தமிழகம் பல நூருண்டு வரையில் தலைமை குன்ருதிருந்தது. கோவலன் கொலையுண்டதறிந்து, அறிவுபேதுற்று அலமரலுற்ற கண்ணகியார் மதுரை மூதூரில் பெருந்தெருவே செல்பவர், "அரசன்பால் தவறிருப்பவும் அதனை எடுத்துரைக்கும் பேச்சுரிமை பெற்ற சான்ருேர் எடுத்துரையாது போயினரே; இம் மூதூரில் சான்ருேர் இல்லையோ? என்பாராய்,

"சான்ருேரு முண்டுகொல் சான்ருேரு முண்டுகொல்,
ஈன்றகுழவி எடுத்து வளர்க்குறா உம்,
சான்ருேரு முண்டுகொல் சான்ருேரும் உண்டுகொல்"

என்று கதறினர்.

இனி, இரண்டாவதாக வழிபாட்டுரிமையைக் காண்பாம். கடவுள் வழிபாட்டில் தமிழகம் மக்கட்கு நெடுங்காலத்துக்கு முன்பே பேருரிமை வழங்கி யிருந்தது. பல்வகையான தெய்வங்களை வழிபடும் இயல்பு தொல்காப்பியம் முதலிய பழந் தமிழ் நூல்களிலே காணப்படுகிறது. குறிஞ்சி முதலிய நிலத்தவர் முருகன் முதலிய தெய்வங்களை வழிபட்டனர். வைதிகம், பௌத்தம், சைனம் முதலிய சமயங்கள் வந்து படர்ந்திருந்த காலத்தும், தமிழ் நாட்டில் வழிபாட் டுரிமைக்குத் தடையுண்டான தில்லை. சங்க நூல்களில் பரிபாடல் என்பது முருகனையும் திருமாலையும் மக்கள் வழிபட்ட நலத்தை எடுத்தோதுகின்றது. பெயர் வகைகள் வேறுபட்டன வாயினும், கடவுட்டன்மை பொதுவாதலால், அவரவர் வழிபாடுகளும் இறைவனொருவனையே சுட்டும் என்பது பழந் தமிழர் கருத்து.

ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்
கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்
அவ்வவை மேய வேறுவேறு பெயரோய்
எவ்வயி னோயும் நீயே நின்ஆர்வலர்
தொழுதகை யமைதியின் அமர்ந்தோயும் நீயே
அவரவர் ஏவ லாளனும் நீயே
அவரவர் செய்பொருட்கு அரணமும் நீயே.

என்றும்,

பகைவர் இவர்இவர் நட்டோ ரென்னும்
வகையுமுண் டோநின் மரபுஅறி வோர்க்கே".

என்றும் வருவன காண்க. இவ்வாறேமுருகனை வழிபடுவோர் 'நீயே வரம்பிற்றிவ் வுலகம்' என முருகனையும், கொற்றவையைப் பரவுவோர் கொற்றவையையும், முழுமுதற் கடவுளாக வழிபட்டமையின், வழிபாட்டு வகையில் வேறுபட்டுக் காய்தலும் போருடற்றலும் செய்திலர்.

இந் நிலை இச் சங்க காலத்தை யடுத்து வந்த இளங்கோவடிகள் காலத்திலும் தன்மை திரியாதே இருந்தது. சிலப்பதிகாரத்தில் இந்திர வழிபாடும், திருமால் வழிபாடும், முருகவேள் வழிபாடும், கொற்றவை வழிபாடும் நிகழ்வது காண்கின்றோம். சைனத் துறவிபால் அருகனை வழிபடுந் திறமும் நன்கு காணப்படுகிறது.

ஒருமூன் றவித்தோன் ஓதிய ஞானத்
திருமொழிக் கல்லதுஎன் செவியகம் திறவா;
காமனை வென்றோன் ஆயிரத் தெட்டு

நாமமல்லது நவிலாது என்நா;
ஐவரை வென்றோன் அடியிணை யல்லது
கைவரைக் காணினும் காணா என்கண்

என்ற இளங்கோவடிகள், 'சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே, 'திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே' 'கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே, கண்ணிமைத்துக் காண்பார் தம் கண்ணென்ன கண்ணே' என்றும், 'பஞ்சவர்க்குத் தூது நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே, நாராயணா வென்னா நாவென்ன நாவே' என்றும் பாடுவது போதிய சான்றாகும்.

இனி, இதனை யடுத்து வந்த மணிமேகலை யாசிரியர் காலத்தில் தமிழகத்தில் சைவம், வைணவம், வைதிகம், பௌத்தம், ஆருகதம், நியாயம், சாங்கியம், வைசேடிகம், யோகம், மீமாஞ்சை முதலிய பல சமயங்கள் இருந்தன என்பது வெளிப்படை. இவ்வாறு சமயங்கள் பல இருந்தன வெனினும், அவைதம்முள் போரிட்டுக்கொண்டு ஒருவர் ஒருவர் வழிபாட் டுரிமைகளைப் பறித்துக் கொண்டதாக வரலாறு கிடையாது.

இனி, இதனை அடுத்துவந்த திருமூலர், காரைக்கா லம்மையார் முதலியோர் காலத்தில் பல சமயங்கள் நிலவின. சமயப் பூசல் காணப்பட வில்லை. இவற்றிடையேயும் ஒற்றுமை காண்பதற்கு முயற்சி செய்யப்பட்டுளது. திருமூலர்,

ஒத்த சமயங்கள் ஓராறு வைத்திடும்
அத்தன் ஒருவனும் என்ப தறிந்திலர்
அத்தன் ஒருவனும் என்ப தறிந்திடின்
முத்தி விளைக்கும் முதல்வனுமாமே

ஆன சமயம் அதுஇது நன்றெனும்
மாய மனிதர் மயக்க மதுவொழி;
கானங் கடந்த கடவுளை நாடுமின்
ஊனங் கடந்த உருவது வாமே

என்பது காண்க.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் சமண் சமய முன்னேற்றத்தால் சமயப் பூசல் உண்டாயிற்று. வழிபாட் டுரிமைக்குத் தடை பிறந்தது. நடு நாட்டில் பல்லவ வேந்தனும் பாண்டி நாட்டில் நெடுமாறனும் சமயப் பூசலில் தலையிடுகின்றனர். சமயப் போர்

சமண் சமயம் ஒன்றேடுதான் நடந்திருக்கிறது. ஏனைச் சமயங்கள் எல்லாம் இருந்த வண்ணமே இருந்திருக்கின்றன. சமண் சமயத்தைத் தாக்கிப் பேசும் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் முதலியோர்களும் திருமங்கையாழ்வார் முதலியோர்களும் ஏனைச் சமயங்கள் இருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றூர்கள். இதனையடுத்து வந்த நூற்றுண்டுகளில் சமய வேறுபாடுகள் நாட்டில் நிலவினவாயினும், தமிழ்நாட்டு அரசியலாளர் இச் சமயங்கட்கு இடுக்கண் விளைக்கவில்லை. அவ்வச் சமயத்தவர்க்கும் வேண்டும் உரிமைகளை வழங்கியிருக்கிறூர்கள். முதல் இராஜராஜன் போளூர்த் திருமலையிலிருக்கும் சமண் கோயிலுக்கு நிபந்தம் விட்டிருப்பதும், லெய்டன் கிராண்டு எனப்படும் சாசனங்களால் பௌத்தர் கோயிலுக்கு நிபந்தம் விட்டிருப்பதும், அவன் பின் வந்த சோழர்களுள் மூன்றும் இராஜராஜன்.

> செப்பரிய வடகலையும் தென்கலையும் தலையெடுப்ப
> நீதிதரு குலநான்கும் நிலைநான்கும் நிலைநிற்ப
> ஆதியுகம் குடிபுகுத அறுசமயம் தழைத்தோங்க

என்றும், மூன்றும் இராஜேந்திரன், "சமஸ்தஜகதேக வீர" என்று தொடங்கும் மெய்க் கீர்த்தியில் "ராஜ பரம மாகேஸ்வர ராஜ நாராயண சகல சமய ஸ்தாபக" என்றும், பாண்டி வேந்தருள் மாறவன்மன் சுந்தரபாண்டியன், ஒரு குடை நீழலிரு நிலங் குளிர,

> மூவகைத் தமிழும் முறைமையின் விளங்க,
> நால்வகை வேதமும் நவின்றுடன் வளர
> ஐவகை வேள்வியும் செய்வினை இயற்ற
> அறுவகைச் சமயமும் அழகுடன் திகழ
> எழுவகைப் பாடலும் இயலுடன் பரவ

என்றும், சடையவன்மன் சுந்தரபாண்டியன்,

> ஒருமைமனத் திருபிறப்பின் முத்தீயின் நால்வேதத்
> தருமறையோர் ஐவேள்வி யாறங்க முடன்சிறப்ப
> அருந்தமிழும் ஆரியமும் அறுசமயத் தறநெறியும்
> திருந்துகின்ற மனுநெறியும் திறம்பாது தழைத்தோங்க

என்றும் கூறுவதும் பல்வகைச் சமயங்களும் தத்தம் உரிமை குன்றுது நிலவியிருந்தன என்பதற்குச் சிறந்த சான்று பகர்கின்றன.

(தொடரும்.)

# பழக்கம்

K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

வாழ்வியல் முறைக்கு இன்றியமையாது வேண்டப்படுவன வாகிய பழக்கமும் வழக்கமும் ஒன்றையொன்று பற்றும் இயல்புடையனவா யிருப்பினும், பழக்கமாவது குற்றமும் குணமும் ஆய்ந்து, ஒன்றை நெருங்கி உணர்விற் படிந்து, புதிதாக நயப்படு முறையிற் பழகும் தன்மையாகும். 'பல்காற் கண்டுஞ் சொல்லாடியும் மருவுதலே' பழகுத லென்றார் பரிமேலழகர். சொல்லே யல்லாது, நினைவு, செயல் முதலியவற்றானும் நெருங்கி உணர்வு கொள்ளும் நுணுகிய பயிற்சியின் முதிர்வும் பழக்க மாதலான், இஃது மக்க ளுயிரோ டியலுறுந் தொடர்புடையதாய், அறிவு வளர்ச்சிக்கும், வளம் படுத்தும் உழைப்புக்கும் வழி கோலி வயங்கும் மாண் புடைய தென்பது தேற்றம். நினைவு, சொல், செயல்களாற் பழகும் பழக்கங்கள், வாழ்க்கையில் அறிவை ஓங்கச் செய்து, மக்கட் பண்பைச் செந்நெறிப் படுத்தும் உண்மையை யுணர்த்தி, இம்மை மறுமைப் பேறுகளை நல்க வல்லன வாதலால், மாந்த ரனைவரும் ஒரு தலையாக இதன் திறத்தில் மிக விழுப்ப முடையராய் ஒழுகல் வேண்டும். நற்பழக்கங்க ளென்றும் தீய பழக்கங்க ளென்றும் இருவகைப்பட்ட பழக்கங்களில், தீய பழக்கங்கள் அறிவு, அன்பு, அருள், உலக நடை முதலியவற்றை ஒருங்கே கெடுத்து, நீங்கா நிரயத்தில் மக்க ளுயிரைப் புகுத்தி விடுதலான் நற்பழக்கங்களின் விழுமிய தாய தன்மையினைக் கருத்தாய்ப் பகுத்தறிந் துணர்ந்து கடைப் பிடிப்பது, மாந்தர்க் குரிய நேரிய கட னாகும்.

பழக்க மெனும் இயல்பு, மக்களாய்ப் பிறந்தார்க்கு அறிவு விளக்கமும், பயன் கொளும் நெறிகளும், தெளிவுகளும் விளைத்து, ஒவ்வொரு துறையிலும் அன்னவரை முயற்சி யற்ற இயற்கை வாழ்வில் எய்துவிக்கின்றது. விரும்பத் தகுந்த இத்தகைய இயல்பில தாயின், மக்களின் சிறிய வாழ் நாளில் நேரும் இன்னல்களும், இடர்ப்பாடுகளும் பெரிதாம். மற்றும் அவர்களது நிலைமை காரிருளில் கைவிடப்பட்ட கண் ணிலாக் குழவிகளின் நிலைமையை யொக்கும். உலகத் தியற்கை

இருளும் மருளு மாதலான், அவற்றின் செறிவை யகற்றும் கைவிளக்கு, தழுவுதற் கேற்ற தகைமை யுடைய பழக்க மெனும் பயிற்சி யென்பது பெறப்படும். எனவே, இதுபோது வழங்க லுறும் நினைவு, சொல், செய்கைத் திறங்களும், உலகின்கண் தோன்றுதொட்டுத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிற பழக் கத்தின் விளைவே யன்றி, பிறிதன்றென்பதூஉம், அன்பு, அருள், அறிவு விளக்கத்திற்குக் கைகண்ட மணி விளக்கு, பழக்க மென்னும், ஒவ்வொரு பயிற்சியின் முதிர்ச்சி யல்லாற் புவியில் வேறில்லை யென்பதூஉம் அறியற்பாலன வாம்.

மக்கள் பயிரூறும், அறிவு விளக்க மெய்துதல் கண் கூடாகலின், பழக்கத்தின் பயனும் பேறும் தெரிந்து தெளிந் தோரை இன்ப வூறலில் இருத்த வல்லது அப் பழக்க மாதலான், அஃது அவ் வாழ்க்கைத் துறையில் எல்லா நலனும் எய்துதற்கு இன்றியமையாததென்பது போதரும். பயிற்சியில் முற்றிய பழக்க வுணர்வு ஒளியும் புகழும் ஒருங்கே நல்குதல் விலங்கலின் மேல் விளக்குப் போலும். உள் ளொளியும் உணர்வும் மாட்சிமைப்பட்டு, இன்புறும் வகையில் பயின்று தேறியோர் அறம் வளரும் செழி நில னுதல் தேற்றம். அன்னார்க்குத் தீது நீக்கும் பயிற்சியை மேற்கொண் டொழுகு தலே திட்ப முடைய அற மாகும். பழி பாவத்திற் கிடனின்றி, ஆக்கம் பெருக்கும் முயற்சியே அவரது செயற் கரிய செய லாகும். வீடு பேற்றுக்குக் காரண மாய ஒளிப் பேறும் பழக்கத்தின் பயன் கண்டாரா லெய்தற்பாலது. எனவே, அன்னாரின் தகைமையும், வீடு என்னும் விழுமிய பொருளையும் பயக்கு மெனல் அமைவுடைத்து. இத் தகைமையின் கண்,

‘ஞாயி றன்ன வெந்திற லாண்மையுந்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையு மூன்றும்’

அடங்கி நிற்றலினால், கடலின் ஆழத்தையும், கண் ணகன்ற ஞாலப் பரப்பினையும், காற் றியங்கும் திசைகளையும், வடி வின்றி நிலைஇய வானத்தையும் அளந்தறியினும், தகுதியானும் பழக்கத்தானும் மிளிரும், அறிவும், அன்பும் பெருங் கண்ணோட்டமும் அளவிட லரிது. இத் தகைய வுண்மைக் குறிப்பு,

‘இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்

வறிது நிலைஇய காயமும், என்றுங்கு
அவையளந் தறியினும் அளத்தற் கரியை
அறிவும் ஈரமும் பெருங்கண் ணேட்டமும்'

என்ற புறப் பாட்டின்கண் நுவலப்பட் டிருப்பது அறிதற் பாலது.

நினைவு, சொல், செயல்களாற் பழகும் பழக்கங்கள், வாழ்க்கையை வயங்கச் செய்வதால், அவை தம்மைப் பின் பற்றுவது, சிறிது ஆழ்ந்துணர்ந்து பயில்வாரும் நன்கறிவர். நினைவின் உறைப்பினுல் மனம் ஒருமைப்பட்டு நிற்றலால், வாழ்க்கைத் துறைகள் யாவும் சிறப்பெய்துவது வழக்கத்திற் காணும் காட்சி யளவை யொன்றானே துணியப்படும். உள்ள வொருமை, நினைந்து பழகுவதால் வீறுறுதலான், அதன் வலிவில் முற்பட்டார், 'மாந்தர்க்கு இனத் தியல்ப தாகும் அறிவு' எனக்கொண்டு, புறப் பொருள்களில் தம் முணர்வைச் சிதற விடாது, அதனை அகத்தே திருப்பி, உணர்வுக்கு உணர்வான அரு ளொளியில் நிறுத்த முயல்வார். இவ் வகையில் பழகி ஒழுகும் நிலை, முடிவில் இறைவனை இடை விடாது நினைவு கூரும் வாய்ப்பில் வயப்படுத்தலால், அந் நிலையில் படிந்தொழுகுவார் திருவருட்டன்மை எளிதே பெறுவ ரென்பது திண்ணம். இங் ஙனம் உண்மை யன்பால் உள்ள முருகி திருவருள் வன்மையால் உணர்வை ஒரு வழி நிறுத்தி மன ஒருமை பெற்ற ரது நினைவின் ஆற்றல், மன்னுயிர்த் தொகுதிகளையும் தன் வயப் படுத்தி நல்வழி காட்டுதற்கும் உரிமையினை யுடைத்து. துன்பமுங் கவலையும் இகழ்வும் பழியும் நீங்கி, இவ் விழுமிய உள்ளப் பழக்கத்திற் றலை நின்ற பண்டைத் தமிழ்ப் பெரு மக்களும் அவர் தம் மரபின் வழி வந்தாரும், பற்றுவைத் தொழுகின் மனம் உயிரின் வழிப்படா தென்பதை உள்ளத்தே யோர்ந்து, பகுத்தறிந் தொழுக லென்னும் முயற்சியில் பயிற்சி பெற்று அந் நிலையில் இணை யற்ற தேர்ச்சி யடைந்து சிறந்தா ரென்பதற்கு,

'எப் பொருள் எத் தன்மைத் தாயினும் அப் பொருள்
மெய்ப் பொருள் காண்ப தறிவு'

'எண் பொருளவாகச் செலச் சொல்லித் தான் பிறர் வாய்
நுண் பொருள் காண்ப தறிவு'

'ஆரா வியற்கை அவா நீப்பின் அந் நிலையே
பேரா வியற்கை தரும்'

'இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு'

என்ற வள்ளுவனர் வாய்மொழிகளே போதிய சான்று. தவத்தானே மனத் தூய்மை பெற்று அவா வறுத்தலான் மெய்யுணர்வும், வீடு பேறும் தலைக் கூடியதினுன் பேரறிவும் வாய்க்கப் பெற்ற வள்ளுவர், அறம் பொருளின்ப மும்முதற் பொருளில் அன்பு ஒளிரும் வழக்கினைக் கண்டு மன்னுயிர்த் தொகுதிகள் பால் பகுத் தறிந்தொழுகும் பழக்க நினைவை சிதற விடாது ஒருவழிப் படுத்தவே, வாழ்க்கை முறையை இல்லறம் துறவறம் என வகுத்து அவை பழக்கத்தாற் றுலங்கும் பான்மையினையு முடைய தென்று அறிவுறுத்து வாராயினர். இல்லறத்தி னின்று அன்பு செய்து அதன்வழி அருளுடைமை பெற்று துறவறத்தில் சார்தல் எளிது பழகு நெறி யென்பதை யுணர்த்தவே பன்னூற் றுறை போகிய செந்நாப் போதார் 'அருள் வெஃகி யாற்றின்க ணின்றவன் இல்வாழ்வான்' எனமிக்க பொருண்மை தோன்ற விளங்க வைத்தது கருதுதற் கினிய சீரிய குறிப்பாகு மென்க. எனவே மக்கள் வாழ்க்கைக்கு ஊறு நேராவாறு முயற்சியிலா எளிமையினை யூட்டுவது எழில ரும்பும் பழக்கமென்பது தெற்றெனத் தெளியப்படும்.

எண்ணிய பொருள்களை எளிதிற் புலப்படுத்துவது சொற்பழக்கத்தால் விளையு மாதலான், சொற் றிறமுடையார் பொருட் பேறு சிறக்க அறிவிக்கும் ஆற்றலுடைய சொற்களை இடமறிந்து பொருத்தி தொகுக்கும் திறன் மனவொருமை வலியின் மாட்சியினு லென்பது ஈண்டுப் பெரிதும் நினைவு கூரற் பாலது. செய்வன, தவிர்வன, வேண்டுவன முதலிய யாவும் சொற்கள் அறிவிக்கின்றமையான், அவைகளை வழங்குங்கால் வழுப்பட வொட்டாது ஆய்தல் இன்றியமையாதென்பதை யுணர்த்தவே, வள்ளுவர் 'திற னறிந்து சொல்லுக சொல்லை' 'பயனில சொல்லாமை நன்று' என்றும் கூறுவாராயினர். என்னை யெனின்? ஆற்ற லில்லாதன கருதிய பொருளை விளக்கஞ் செய்யா தாகலின் என்க. உள்ள வொருமைப் பெற்ருெரொருவர் ஆற்றல் வாய்ந்த சொற்களை வழங்கு முறையானே, பிறரை ஆக்கவும் அழிக்கவும் வல்லராவர். 'நிறை மொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்,' 'நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த மறை மொழி தானே மந்திரம் என்ப' என்பன ஈண்டறிந்து இன்புறற் பாலது.

தொல்காப்பியப் புறத்திணை யியலில் கூறப்படும் செவி யறிவுறூஉ, வாயுறை வாழ்த்து முதலிய துறைகள், இன்னுரையாலும் இய லுரையாலும், இடித் துரையாலும், மன்னருக்கும் மக்களுக்கும் நல்லறிவு கொளுத்தி அன்னோர்களை நல்வழிப் படுத்தினமையான், பண்டைத் தமிழர்கள் அன்பும் அறனுங் கொண்டு பிறரைத் தம் வய மாக்கிக்கொள்ளும் ஆற்றலுடைய சொற் பழக்கத்தில் எத் துணைச் சிறப்பு வாய்ந்தவர்க ளென்பது வெள்ளிடை விலங்கல். தமிழ் மொழியின் எழுத்துக்களின் ஒலி நுட்ப திட்பமும் அவ் வெழுத்துக்களாலாய சொற்களின் இனிய ஓசை யின்பமும் சுவை நலப் பேறும், பொலிவும், பிற மொழிகள் யாதொன்றினும் உள தாகக் காணப் படாமையான், தமிழின் தனிப் பெருஞ் சிறப்புரிமை பிறங்கிப் புலனுதல் கண்கூடு. தமிழ்ப் பெருமக்கள் மொழிப் பொருட் காரணம் ஆய்ந்து சொற்களின் பிறப்பும் வளர்ப்பும் இயலும் செயலும் கண்டு இயலுமிடத் தெல்லாம் ஒவ் வோர் சொல்லையும் இயற்கை யறிவு திகழப் புனைந்து வைத்துள்ள மாட்சியினை காணுங்கால் தமிழ்மொழி பிற மொழிக் கலப்பில்லாது தனித் தியங்கும் பே ராற்றலும் பேராண்மையும் வாய்ந்துள்ள தென்பது அறியப்படும். மற்றும் பிற மொழிக் கலப்பினை யொழித்து தூய தனித் தமிழ்ச் சொற்களை வழங்கும் தமிழ் மக்களது பற்றுடன் கூடிய பழக்கம் இதனுன் புலப்படும். எனவே, தமிழ் மொழி இரு வகை வழக்குகளிலும் தனது இயக்கத்திற்கு பிற மொழியின் துணையினை நாடாது கடவு ளருங் காதல் கொள்ளும் வண்ணம் தானே தனித்து இயங்கிய மென்மை இழும்பூ தெய்தற் பாலது. மற்றும் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்றித் தொடக்கத்துப் பழந் தமிழ்ப் பெரு நூல்களில் வழங்கும் சொற்க ளெல்லாம் பெரும் பான்மை தூய தனித் தமிழ்ச் சொற்களாய் வரும் முறையினையும் தகுதியையும் தழுவும் தன்மையன. வேற்றுப் புலமொழிச் சொற்களும் அந் நூல்களுள் சிறு பான்மையாக காணப் படுதலான், தனித் தமிழ் மொழி வழக்கை நிலை நிறுத்தும் பழக்கம் பண்டைத் தமிழ்ப் புலவோர் பால் வன்மை மேவ வழங்கிய தறியப்படும்.

நுணிகி ஆயும் வழி, இத் தகைய தனித் தமிழ் நூல்களில் வல் லெழுத்துக்கள் நீங்க, மெல் லெழுத்துக்களையும் இடை யெழுத்துக்களையும் தம் வயின்கொண்ட சொற்களையும் சொற்

ருெடர்களையும், மற்றும், பெயர், வினை, இடை, உரி என்னும் சொற்க ளுள்ளும், செஞ் சொற்களையும் பெரும்பாலும் எடுத் தாளப் படுவதினுன், அவைகள் ஓசை யின்ப நயனையும் மூவா இளமைச் செவ்வியு முடையனவாய்ப் பொலிகின்றன. தொன்மை சான்றதோர் தமிழ் மொழியின் சிறப்பு நிலையைத் தெரிக்கும் இத் தகைய நூல்களில் பயிற்சி யில்லாதார், ஆடு தழை மேய்ந்தாற் போன்று, ஓசை நலமிலா பிற மொழிச் சொற்களைப் புகுத்தி கலப்பு உரை நடை நூல்களும், செய்யுள் நூல்களும் இயற்றுதலான் தமிழ் மொழிக்கு ஏதம் ஏற்படவும் தமிழ்ச் சொற்கள் வழக்கி னின்றும் வீழவும் வாய்ப் புண்டா கிறது. விலைத்தீட்டு, (Sale deed) ஒற்றிக் கலம் (Mortgage bond) முதுகண் (Guardian) என்ற வழக்கு வழிப்பட்ட தமிழ்ச் சொற்கள் யாவும் கால வழக்கு சுவடற்று இன்று சாசன பத்திரம், பந்தகப் பத்திரம், போஷகர் என முறையே வழங்கப் படுகின்றன. தூய தனித் தமிழ்ச் சொற்கள் இவ்வாறு உருத் திரிந்து தொன்மை நிலை குலைந்து போவதற்கு மனம் ஒருப்படாது பிற புலமொழிச் சொற்கள் கலப்பினுன் பிற்றை ஞான்று தமிழ் மொழிச் சொற் பழக்கத்திற்கு கேடு விளையு மென முன்னமே யோர்ந்து, மொழி நூல் வல்ல புலவர்கள், தமிழ் மொழிக் கண் சிறப்பு செய்ய வேண்டி அயல் மொழிச் சொற்களை ஒலி வழாது தமி ழோசைப் படுத்தித் திரித்து வழக்கத்தில் கொண்டுவர விதிகளும் வகுப்பா ராயினர். கலப்பினுன் வளர்ச்சி யுறுதல் இயற்கை இயல் பாயினும், அதனுன் விளையும் கேட்டினை களை யெடுத்தல் மதியுடைமை யாகு மன்றே! சிலப்பதிகாரத்தின் கண், 'தக்ஷிணாமூர்த்தி' எனக் கூற வந்த இளங்கோவடிகள் 'ஆலமர் செல்வன்' என தமிழ்ப் படுத்தி அமைத்த மென்மை ஈண்டு அறியற் பாற்று. பழந் தமிழ்ச் சான்றோர் வேற்றுப் புல மொழிகளை இத் தகையவாறு தமிழில் பெயர்த்து அதற்குரிய விதி, மனங் கவன்று அமைத்தா ரேனும், தமிழ் மொழி பால் ஐயம் ஏற்று வாழ்ந்து வந்த பிற மொழிகள் முதற்கண் பேச்சு வழக்கில் நிலை பெற்று தமிழ்ச் செய்யுள் வழக்கிலும் படிந்து

ஆட்சி பெறும் நிலையினையும் அடைய லாயின. இவ்வாறு தமிழ்ச் சொற்களின் நிலைக்களனை பிற மொழிச் சொற்கள் பற்ற முனைந்தாலும் அவைகளின் வீணான முயற்சி பாழ்படு மென்பது யவனர் தம் வரலாற் றுண்மையால் தெளியப்படும். அமருடற்றி தாம் (உரோமர்) வென்று சிறை செய்த யவன ராலேயே, தாம் கண்ணோட்ட முறையில் சிறை செய்யப்பட்டு அவர் வழி யொழுக நேர்ந்த தென்பது (Captive greece captive her brave & proud Conqueror) போன்று, தமிழ்ச் சொற்கள் பால் சாரும் பிற மொழிச் சொற்களின் வழக்கு அருகிச் சிதைந் தொழிய, தமிழ் மொழிக்கு இலக்கண வரம்பு அமைதியும், தண்மையும், தனித் தியங்கும் பே ராண்மையும் இயற்கையில் ஒருங்கே அமைந் திருப்பதும், பிற புல மொழி கள், தமிழ் மொழியை தம் வழிப்படுத்த இயலாமையும் விளங்கலாயிற்று. தமிழ்ச் சொற்கள் இயற்கை ஒலி நுட்பத் தால் ஓசை யின்பமும், சார்பு பற்றி விரிதல், இனந் தழுவல், முதலிய இயை புடைமையால் வளமும் எழிலும் தூய்மையும் இறை நலமும் கொண்டுள்ளன. மற்றும் தமிழ் மொழிக் கண்ணே தன் வரலாற்றைத் தானே கூறும் சொற்களும், பல் பொருளைத் தரும் ஒரு தனிச் சொல்லும், ஒரு பொருளைத் தரும் பல சொற்களும் உண் டென்பதும், இவ் வகையினுன் ஏறத்தாழ எழுபதினுயிரம் கூடிய தனித் தமிழ்ச் சொற்க ளுண்டென்பதூம் மொழி நூல் வல்ல சான்றோர்க்கு உடன் பாடாகுமென்பதும் ஒப்ப முடிந்த முடிபு. ஆகவே, எய்ப்பினில் வைப்பா யிருக்கும் பழந் தமிழ் நூல்களில் காணப்படும் தனித் தமிழ்ச் சொற்களை வழக்கில் வீழாத வண்ணம், நறுந் தமிழும் நாப் பழக்க மாதலாலே, அளவளாவி உரைக்கும் பழக்கத் திலும், பழக்கத்தின்பாற் பட்ட சொற்களைச் செய்யுள் வழக்க நெறியிலும், ஒல்லும் வகை பிற மொழிக் கலப்பினை ஒழித்து, நிலை நிறுத்தும் கடப்பாடு, தமிழ் மொழியினைப் பயிலும் பழக்கமுடைய தமிழ் மக்களின் சீரிய கடனு மென்றறிக. தனித் தமிழ் வழக்கை, பழக்கத்தில் நிலைபெற வழங்கும்

செவ்வியி னாற்றான் தெள்ளிய பைந் தமிழ் உரை நடையும், பழக்க வழக்க நெறியும் மிளிர்ந்து வாய்ப்பது எளி தாகும்.

ஆற்றல் சான்ற திருந்திய சொற் பழக்கத்திற் றோய்ந்து, தீமை யிலாத சொலினதே அறமெனக் கொண்டோர், திற னறிந்து தீ திலா முறைமைகளில் செய்யும் செயற் பழக்கங்கள் யாவும் இன்ப வமைதி பயக்கும் அறம், தவம், நல்வினை முதலிய ஆக்கம் பெருக்கும் முயற்சியில் கோலி விளங்கும். பல்பெரும் பாவலர்களால் பாடப் பெற்ற புறநானூறு அகவற் பாக்கள், தமிழ் முதுமக்கள் அரு ளன்பினுல் தா மின்புறுவது உல கின்புற வெனக் கொண்டு தமிழ் மரபிற் பழகிய நல்லொழுக்கச் செயற் பழக்கங்களில் பழகி இன்ப வமைதி பெற்று வந்த சீரிய முறையினை பாரித் துரைப்பதினான், அப் பழக்க வழக்கங்கள் பின்பற்றற் பாலன வென்பதூஉம் அவை யாவரையும் இனிது வாழ்விக்க வல்ல தென்பதூஉம் தெளி பொருளாம். பழந் தமிழர் வழங்கிய பழக்க வழக்கச் செல்வங் கள் யாவும், பிற் காலத் தமிழர் வேற்றுப் புலமொழியாளர் களோடு துவன்றி வாழ்ந்து தமிழ் மரபுக்குப் புறம்பாய தொழிற் றுறைகளில் பெரிதும் வளம்பட வாழ்வதில் ஈடு பட்டதினான், ஓம்பப் படாது நெகிழ விடப்பட்டன. இதனான், தமிழர் தம் அறிவின் திண்மை தளர்ந்து போக, தமிழர்கள், நற் பழக்க நல் வாழ்க்கைத் துறைகளில் விளக்கமும் வெற்றியு மிலாராய்க் கோலும் நலமு மிழந்து இழி நடையடைய இயல் பாயிற்று.

ஆகவே, மக்க ளுயிர்க்கு உற்ற துணையாவது பழக்க மென்பதூஉம், நினைவு சொற் செயல் களாற் பழகும் நற் பழக்கங்களே வாழ்க்கையில் இம்மை மறுமைப் பேறுகளை விதிக்கும் விழுப்பமுடைய தென்பதூஉம், தமிழ் மரபிற் பழகிய பழக்கங்கள் அருள் அன்பு ஆகிய அற வுணர்வுகளை அடிப் படையாகக் கொண்டு எஞ்ஞான்றும் தழுவுதற் கேற்ற தகைமை யுடையன வென்பதூஉம் இவ்வாற்றான் இனிது விளங்கா நிற்கு மென்க.

தமிழ் வாழ்க

# கபிலரகவல்.

வித்துவான் க. வெள்ளைவாரணர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

இந் நூல் 138 அடிகளால் ஆகிய அவகற் பாட்டாகும். இது தோன்றிய செவ்வியைக் குறித்துப் பேசப் படுஞ் செய்திகளை முதற்கண் நோக்குவாம். சோழியப் பார்ப்பானாகிய பகவன் என்பவனைத் தொடர்ந்து சென்ற ஆதி யென்னும் கருவூர்ப் புலைச்சி, தான் அவனைக் கூடிப் பெற்ற உப்பை, உறுவை முதலிய மக்கள் எழுவரயும் அவனது விருப்பின் படிப் பிறந்த இடங்களிலேயே விட்டு விட்டுச் சென்றாள். அவள் பெற்ற பிள்ளைகளுள் திருவாரூரிற் பிறந்தவர் கபிலர். அப் பிள்ளையைக் கண்ட அவ்வூர் வேதிய ரொருவர், அவரை யெடுத்து வளர்த்து வந்தார். உரிய பருவத்தில் அப் பிள்ளைக்கு உபநயனம் செய்யத் தொடங்கினர். அது கண்ட மற்றைய வேதியர்கள், அப் பிள்ளையின் பிறப்பு வரலாற்றின் இழிபினை யெடுத்துக் காட்டித் தடை செய்தனர். தமது பிறப்பினை இழித்துரைக்கக் கேட்ட இளம் பிள்ளையாகிய கபிலர், பல பிறப்பினும் தொடர்ந்த கல்வியா னுள தாகிய இயற்கை யுணர்வுடைய ராதலின், ஒழுக்கத்தா லன்றிச் சாதியால் உயர்வு கூறுதல் தகாது என்பதனை இவ்வகவற் பாடலின் வழியாக அவ் வேதியருக்கு அறிவுறுத்தினர். இதுவே கபில ரகவலாகிய இதனைப்பற்றி வழங்கும் கதை யாகும்.

இவ் வகவலைப் பாடியவர் சங்க காலத்து வாழ்ந்த கபிலர் என்னும் பெரும் புலவரே என, இதனை மேற்போக் காகப் படிப்பவர் முதலில் எண்ணுதல் கூடும். இவ் வகவலின் சொற்பொரு ளமைதியினையும், பிற சூழல்களையும் நுணுகி நோக்குவாருக்கு, அக் கருத்து பொருந்துவதன்று என்பது புலனாம்.

சங்க காலப் புலவ ராகிய கபில ரென்பார் தமிழ் நாகரிக வாழ்வு வாழ்ந்த செந்தண்மை மிக்க அந்தண ராவார். அரச ருடனும் வேளி ருடனும் ஒருங்கு பழகியவர். சாதி

வேறுபாடு அறியாக் காலத்தவர். தன் னுயிர்த் தோழனுகிய பாரி இறந்த பின்னர் அவனுடைய மகளிர் இருவரையும், பார்ப்பார் இல்லில் ஒப்படைத்து விட்டு வடக்கிருந்து உயிர் துறந்தவர். இவர் பிறந்த வூர் தென் பறம்பு நாட்டி லுள்ள திருவாத வூராகும். இவ் வுண்மை, 'நீதிமா மதூாக நீழல்' எனத் தொடங்கும் திருவாலவாயுடையார் திருவிளை யாடற் புராணச் செய்யுளில் 'கபிலனுர் பிறந்த மூதூர் ................வியன் திருவாத வூரால்' என வருங் குறிப்பினுல் அறியலாம். பாரியும் கபிலரும் உயிர்த் தோழராக நண்பு பூண்டமைக்கு, அவ் விருவரும் பறம்பு நாட்டிற் பிறந்தவ ராய், ஒரு தேயத்தா ராதலே காரண மாகும். இவ் வக வலிற் குறித்தபடி கபிலர் பிறந்த வூர் திருவாரூர் என்ப தற்கு எவ்விதச் சான்று மில்லை. கபிலர் பாடல்க ளாகச் சங்க இலக்கியங்களில், தொகுக்கப் பட்ட செய்யுட்கள் யாவும், சொற் பொரு ளமைதியால் ஒன்று மற் றவற்றெடு ஒத்திருக்கக் காணுகின்றேம். இக் கபில ரகவல் சங்க இலக்கிய நடைக்கு முற்றிலும் மாறு பட் டுள்ளது. 'அந் தணன் புலவன்' (புறம் 200, 201) எனச் சங்கப் புலவ ராகிய கபிலர் தம்மைக் குறிப்பிடுத லாலும், 'புல னழுக் கற்ற அந்தணுளன்' (புறம். 126) என அவரை மாறேக் கத்து நப் பசலையார் பாராட்டுவதாலும், அவர து பிறப்பின் தூய்மை பெறப்படும்.

இச் செய்திக்கு மாருகக் கபில ருடைய பெற்றேரை முறை பிறழ்ந்த செயலினர் எனக் கூறுதல் பொருந்துவ தன்று. சேரர் கிளையின ரான அதிகமானுடைய மரபின் மாண்பினை 99ஆம் புறப் பாடலால் ஔவையார் இனிது விளக்கி யுள்ளார். அதற்கு மாருக இவ் வகவல் அவனைப் புலைத்தி மக னெனக் குறிப்பிடுகின்றது. அதிகமானுற் போற்றப் பெற்ற ஔவையார் என்னும் பெரும் புலவர் தம்மைப் பரிசிலர் நிலையில் வைத்துக் கூறிய பாடற் பொருளை உளங் கொள்ளாது, அவர து பிறப்பை இழித்துக் கூறியது சிறுதும் அடாததொன்றும். குறிஞ்சி நிலக் கடவு ளாகிய முருகப் பெருமானது திருவரு ளாற்ற லாகிய வள்ளி யென்பதனைப் பற்றிய குறிப்பு தொல்காப்பிய முதலிய பழந் தமிழ் நூல்களில் பாராட்டப் பெற்ற தொன்மை யுடைய தாகவும், அதனை யுணராது தமிழர் தொழு குல மாகிய வள்ளி யென்னும் தெய்வத்தைக் கருவூர்ப் புலைச்சி

யின் மகளென இழித்துரைத்தது ஒரு சிறிதும் அடாத செய லாம். தமிழர் பெருங்குடியிற் பிறந்து, அரசியலில் உள்படு கருமத் தலைவராய்த் திகழ்ந்த புலவர், திருவள்ளுவரைப் பொருந்தா ஒழுக்கின ராகிய பகவன் ஆதி யென்பவர் களின் புதல்வ ராக்கியதுடன், அவரால் திருக்குறள் முத லதிகாரத்தில் போற்றி வழிபடப் பெற்ற முழுமுதற் கடவு ளின் திருப் பெயராகிய ஆதி பகவ னென்பதனைத் தம்மாற் புனைந் துரைக்கப் பட்ட பார்ப்பனனுக்கும், புலைச்சிக்கும் உரைப்பது, தமிழரது கடவுள் வழி பாட்டையே தாழ்வு படுத்துவ தாகும். சங்க கால வழக்கிற் காணப்படாத உப்பை, உறுவை என்ற இரு பெயர்கள் புதியன வாகப் புனைந் துரைக்கப் பட்டன எனத் தெரிகின்றது.

இப் பொய்க் கதையினை அடிப் படை யாகக் கொண்டு 'கபி லரகவல்' என்னும் பெய ருடைய இப் பாடல் தோன்றியதற் குரிய சூழ் நிலையினை நடு நின்று ஆராய்வது தமி ழிலக்கிய வரலாற் றுராய்ச்சி யாளரது கடமை யாகும்.

திருவள்ளுவர், கபிலர் முதலியோரைப் பற்றி யிழித் துரைக்கும் இக் கதையினை யார் எக்காலத்திற் புனைந்தார்க ளெனச் சிறிது சிந்தித்தல் வேண்டும். 'யாளி கூவற் றூண்டு மாதப் புலைச்சி, காதற் காசனி யாகி மேதினி, யின் னிசை யெழுவர்ப் பயந்தன ளீண்டே' என்னும் ஞானு மிர்தத் தொடர் கொண்டு, திருவள்ளுவனு ருடைய தந்தை 'யாளிதத்தன்' என்னும் முனிவர்; தாய் புலைச்சி யென இக் காலத்தார் சிலர் எண்ணியதும் உண்டு. அத் தொடரில் 'இன்னிசை யெழுவர்' என்ற தன்றி, அவ் வெழுவரும் தமிழ் நாட்டவ ரென்றோ, புலவர்கள் என்றோ எண்ணுதற் குரிய சிறு குறிப்பு மில்லை. யாளிதத்தன் என்னும் முனிவன் கிணற்றிலே தள்ளப்பட்ட அறிவில்லாத சண்டாளப் பெண்ணைக் கூடி சுநந்தர் முதலிய ஏழு முனிவர்களையும் பெற்றனன் என்பதே ஞானமிர்த உரை யாசிரியர் கருத் தாகும். இம் முனிவர் கதை வடமொழியில் பிருகத் கதை யில் உள்ள தென்பர். அஃ தெவ் வா றாயினும் அக் கதைக் கும் இத் தமிழகத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை யென்பதே நாம் முதற்கண் நினைக்கத் தகுவதாம். கபில ரகவலிற் சொல்லி யுள்ள கதைக்கும் இந்த ஞானமிர்தக் கதைக்கும் எத்தகைய இயைபும் இல்லை. அது நிற்க.

இனி, இக் கபில ரகவலிற் சுட்டப் பட்ட கதை எக் காலத்தில் தோன்றிய தென்பதனை உய்த்துணர்தல் இன்றி யமையாததாம். தமிழ் நாட்டில் அயல் நாட்டவர்கள் மிகுதியாகப் புகுந்து பரவியதனால், அவர்கள் நாட்டின் வாழ்க்கை முறையினையும், இந் நாட்டில் இடைக் காலத்தே புகுந்த சாதி வேறுபாட்டின் இழிதகவினையும், மக்கள் ஒப்பு நோக்கிக் கண்டிக்கத் தொடங்கிய காலம், இற்றைக்கு முந்நூறுண்டுகட்கு உட்பட்ட நிகழ்ச்சியே யாகும். அதி லும் மேலை நாட்டுப் பாதிரிமார்கள் இந் நாட்டிற்கு வந்து தங்கள் சமயத்தில் தமிழ் மக்களை யீர்த்துக் கொள்ள முயன்ற காலத்தே, தமிழ் மக்கள் தங்கள் சமய வுண்மை, மொழி நிலை முதலிய நாகரிக நிலையினை ஆரிய நாகரிக முதலியவற்றி னின்றும் வேறு வைத்து ஆராயும் விருப் பினை மேற் கொண்டார்களென எளிதிற் றுணியலாம். இங்ஙனம் தம்மை ஈர்க்க முயலும் புதிய வருகையால், இதற்குமுன் தம்மை வேறுபடுத்தி மறைத்து நின்ற வேறொரு நாகரிகத்தின் விளைவு சிறுகச் சிறுகப் புலனாகத் தொடங்கியது. இவ் வுண்மை, 'ஒட்டிய மிலேச்சர் ஊணர் சிங்களர், இட்டிடைச் சோனகர் யவனர், சீனத்தர் பற்பல நாட்டினும் பார்ப்பா ரில்லையால்' என இவ் வகவல் கூறுதலாற் புலனும். இத் தகைய சூழ் நிலையே இவ் வக வலைப் பாடத் தூண்டிய தென்பது, இவ் வகவலின் சொற் பொருளமைதியினை ஊன்றி நோக்குவாருக்கு இனிது புலனும்.

இவ் வகவல் பண்டைப் புலவராகிய கபிலர் கூறுவ தாகவே யாக்கப்பெற் றுள்ளது. எனினும் இவ் வகவலின் அமைப்பு முறை, இது அவர் கூற்று அன்று என்பதையும் குறிப்பால் உணர்த்தி நிற்கின்றது.

> 'அருந்தவ மாமுனியாம் பகவற்குக்
> கருவூர்ப் பெரும்பதிக்கட் பெரும்புலைச்சி
> ஆதி வயிற்றினி லன்றவ தரித்த
> கான்முளை யாகிய கபிலனும் யானே.'

என வரும் இவ் வகவற் றொடர், இக் கதை முன்னமே பேசப் பட்ட தென்பதனை உடன்படுவது போல் அமைந் தமை யோர்க! இதன் கண் 'கான்முளை யாகிய கபிலனும் யானே' என்னும் அடி, கபிலன் என்று சொல்லப்படுப

வனும் யானே எனப் பிறர் கூற்றினை உடன்படும் முறையி லுள்ளதனை நோக்கும்போது, இக் கதை வழங்கத் தொடங்கிய காலத்திலே, இப்பாட்டு இயற்றப்பட்ட தென்பது நன்கு விளங்கும். இவ் வகவலில் குறிப்பிட்ட கதையினைப் புனைந்தவர் தமிழர் நாகரிகத்திலும், தமிழர் தூய்மை யுணர்விலும் அழுக்காறு கொண்டவ ராவர். இவ் வகவலும் பெயர் தெரியாப் புலவ ரொருவரால் பாடப்பெற் றிருத்தல் வேண்டும். இடைக்காலத்தே தமிழ் நாட்டிற் புகுந்த ஆரியரால் நாட்டப் பெற்ற சாதி வேறுபாட்டின் இழி தகவினையும் பண்டைத் தமிழ்ப் புலவர்களில் நுண் மாண் நுழை புல முடைய ரெனப் பாராட்டப் பெறும், திருவள்ளுவர் முதலிய அறிஞ ரனைவரும், அறிவு மிக்கிருத் தற்கு, அவர் தம் பிறப்பில், வேதியர் குருதி விரவப் பெற்ற மையே காரணமாகு மெனப் பேதுற மொழிவதனையும் எடுத்துரைத்துக் கண்டிக்க எண்ணிய பிற் காலத்தவ ராகிய இப் புலவர் தம் கூற்றாகக் கூறினால் தம் காலத் தவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் எனக் கருதிப் பண்டைப் புலவ ராகிய கபிலர் கூற்றில், இயற்றினா ரென உய்த் துணர் தல் கூடும். இனி, இவ் வகவலின் பொரு ளமைதியினை ஒரு சிறிது நோக்குவமாக!

இவ் வகவலின் தொடக்கத்தில் உலகப் படைப்பினை யும், வாழ்க்கையின் விளைவுகளையும் பற்றிச் சில வினாக்களை எழுப்புகின்றார். அவற்றிற்கு விடை கூறாது உய்த் துணர வைத்துப், பின்னர் உறுதிப் பொருளைக் கூறத் தொடங்கி,

"உலகத் தீரே! உலகத் தீரே!
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்து,
சாற்றக் கேண்மின்! சாற்றக் கேண்மின்!

என உலகினரை அழைத்து அறிவு கொளுத்துகின்றார் இப் பகுதி

'அறத்துறை மாக்கள் திறத்திற் சாற்றி
நாக்கடிப் பாக வாய்ப்பறையினும் (ஊர்காண். 27-2.)

என்னும் சிலப்பதிகாரத்துக் கவுந்தி யடிகள் கூற்றினை நினைத்துக் கூறிய தாகும்.

'மனிதற்கு வயது நூறல தில்லை
ஐம்ப திரவி லகலுந் துயிலினன்

ஓட்டிய இளமையா லோரைந்து நீங்கும்
ஆக்கை யிளமையி லேம்மூன்று நீங்கும்
எழுபது போகமிக் கிருப்பன முப்பதே' என்னும் பகுதி

வேதநூற் பிராயம் நூறு மனிதர்தாம் புகுவ ரேனும்
பாதியு முறங்கிப் போகும் நின்றதிற் பதினை யாண்டு
பேதைபாலக னதாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலாற் பிறவி வேண்டேன் அரங்கமா நகரு ளானே!

என வரும் தொண்ட ரடிப்பொடி யாழ்வார் பாடலையும், பிற தமிழ் நூற் குறிப்புகளையும் அடியொற்றிய தாகும்.

'பெருக்கா றொத்தது செல்வம் பெருக்காற்
றிடிகரை யொத்தது இளமை' என்பது,
'ஆறிடும்மேடும் மடுவும் போலாஞ் செல்வம்'
என்னும் பகுதியையும்,
'ஓடுபுனற் கரை யிளமை' என்னும் தேவாரத் தொடரையும் நினைவூட்டுகின்றது.

'இடி கரை தவழ் மர மொத்தது வாழ்நாள்' என்பது
'ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழு மன்றே'
என வரும் உவமையின் விரிவினைக் குறிப்பா லுணர்த்துகின்றது.

'ஒன்றே செய்யவும் வேண்டும் ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும் நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும் இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்,
'அன்றறிவா மென்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை' என்ற குறட் பாவின் முதலடிக்கு விரிவுரை யாகும். இன்னும்,
'நாளை நாளை யென்பீ ராகில்
நமனுடை முறைநா ளாவது மறியீர்
நம்முடை முறைநா ளாவது மறியீர்'' என்னும் பகுதி
'நாளைச் செய்குவம் அறமெனி னின்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்

இதுவென வரைந்து வாழுநா ளுணர்ந்தோர்
முதுநீ ருலகின் முழுவது மில்லை' என மாடல

மறையோன் செங்குட்டுவற்குக் கூறியதாக வரும், சிலப்பதிகாரத் தொடரை நினைவுபடுத் துவ தாகும்.

'காலைச்செய் வேமென் றறத்தைக் கடைபிடித்துச்
சாலச்செய் வாரே தலைப்படுவார்—மாலைக்
கிடந்தான் எழுத லரிதாமற் றென்கொல்
அறங்காலை செய்கலா வாறு' என்னும்

அறநெறிச்சார வெண்பாவும் ஈண்டு ஒப்பு நோக்குதற் குரியது.

'எப்போ தாயினும் கூற்றுவன் வருவான்
அப்போ தந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான் தமரொடும் போகான்
சாற்றவும் போகான் பொருளொடும் போகான்
நல்லா ரென்னுன் நல்குர வறியான்
தீயா ரென்னுன் செல்வரென் றுன்னுன்
தரியா னொருகணந் தறுக ணுளன்
உயிர்கொடு போவான் உடல்கொடு போகான்'

என இறப்பினைப் பற்றி இவ் வாசிரியர் கூறும் கருத்துரை,

'தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பொண்டிர் ஆற்றுப் பாலகர்
முதியோ ரென்னுன் இளையோ ரென்னுன்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்ப'

என, மணிமேகலையில், சக்கரவாளக் கோட்ட முரைத்த காதையில் மணிமேகலா தெய்வங் கூறிய தொடரின் விரிவுரையாக அமைந்துள்ளமை காண்க.

'ஏதுக் கழுவீர் ஏழை மாந்தர்காள்
உயிரினை யிழந்தோ உடலினை யிழந்தோ
உயிரிழந் தழுதுமென் றுரேதுவீ ராகில்
உடலினை யன்றலா தின்றுங் காண்கிறீர்
உயிரினை யிழந்த உடலது தன்னைக்
களவு கொண்ட கள்வனைப் போலக்
காலு மார்த்துக் கையு மார்த்துக்

கூறை களைந்து கோவணங் கொளுவி
ஈமத் தீயை யெரியெழ மூட்டிப்
பொடிபடச் சுட்டுப் புனலிடை மூழ்கிப்
போய்த் தமரொடு புந்திநைந் தழுவது
சலமெனப் படுமோ சதுரெனப் படுமோ'

என இவ் வாசிரியர் உலக மாந்தரை வினவுகின்றார். இப் பகுதி,

'யாங்கிருந் தழுதனை யிளங்கோன் றனக்குப்
பூங்கொடி நல்லாய் பொருந்தாது செய்தனை
உடற்கழு தனையோ வுயிர்க்கழு தனையோ
உடற்கழு தனையேல் உன்மகன் தன்னை
எடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே
உயிர்க்கழு தனையேல் உன்மகன் தன்னை
செயப்பாட்டு வினையால் தெரிந்துணர் வரியது
அவ்வுயிர்க் கன்பினை யாயின் ஆய்தொடி
எவ்வுயிர்க் காயினும் இரங்கல் வேண்டும்'

என, மணிமேகலை இராசமாதேவிக்கு அறிவுறுத்தும் மொழிகளை உட்கொண்டு கூறிய தாகும். நிற்க ஒத்த பிறப்பினராகிய மக்களைப் பல்வேறு சாதியின ராகப் பகுத்தல் பொருந்தா தென்பதற்கு இவ் வாசிரியர் கூறிய விளக்கம், இவரது உலகிய லறிவையும் உயர் புல மாண்பையும், வேற்றுமை யற்ற விரிந்த நோக்கத்தையும் இனிது விளக்குவ தாகும். அப் பகுதியை நூலிற் காண்க. இங்ஙனமிவர் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை யென்னும் பெருநோக் குடைய ராயினும், வதியும் இடங் கொண்டே, உயர்வு கூறுபவ ரென்னுங் கருத்து மேற்போக்காகப் பார்ப்போ ருணர்வர். உண்மை அஃதல்ல. ஐயத்திற் கிடனுன, அவ் வடிகளையும் அதன் கருத்தையும் விளக்குவாம்.

'தென்திசைப் புலையன் வடதிசைக் கேகின்
பழுதற வோதிப் பார்ப்பா னுவான்
வடதிசைப் பார்ப்பான் தென்திசைக் கேகின்
நடையது கோணிப் புலைய னுவான்."

தென் னுட்டிற் புலைத் தொழில் செய்வா னெருவன், வடநாடு சென்று ஆரிய வேதத்தை யோதி யுணர்ந்து பார்ப்பான் என்று பாராட்டப் படும் உயர் நிலையினையும் அடைவானென்றும், வட நாட்டிற் கற்றுச் சிறந்த வேதிய னெருவன், தென் னுட்டிற்கு வந்து, தனது ஒழுக்கக் குறைவால்,

இழி நிலையினையும் அடைவா னென்றும், இவ் வாசிரியர் கூறியது, வேத மோதுத லொன்றே வேதியரது உயர்வுக்குக் காரண மாகும் என்னுங் கொள்கையை மறுக்கும் கருத்தினு லாகும். வைதீகர்களால் இழித் துரைக்கப்படும் புலையனும், வடநாடு சென்று, தன்னை யின்னு னென்று புலப்படுத்திக் கொள்ளாமல், அங்கிருந்து வேதங்களை யோதி யுணர்ந்து, வேதிய னெனப் போற்றப் பெறுதலுங் கூடுமென, வேதமோதுதல் வேதியர்க்குமட்டும் உரியதன்று என அறிவுறுத்துதல் இவ் வாசிரியர் கருத்தாகும். இனி, வேதம் ஓதியது ஒன்றே கருதி, 'யான் எல்லாரினும் உயர்ந்தேன்' என்னும் எண்ணம் வேதியருக்கு இருக்கு மானுல், அது தமிழ் மக்களால் மிகவும் இழித்துரைக்கத் தக்கதாகும் என்பதும் இவ் வாசிரியர் கொள்கை யாகும்.

'ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை'

எனவும், 'பார்ப்பான் பிறப்பு ஒழுக்கங் குன்றக் கெடும்' எனவும், சான்றோர் கூறுதலால், இவ் வுண்மை வலியுறுத்தப்படுதல் அறிக.

மேற் காட்டிய செய்யுட்களை யுளங்கொண்டே 'வடதிசைப் பார்ப்பான் தென் திசைக் கேகின் நடையது கோணிப் புலையனுவான்' என இவ் வாசிரியர் அறிவுறுத்துவா ராயினர். வட திசைக் கூறியது, அங்கு வாழ்வார் வேதம் ஓதலால் வரும் உயர்வினை மதித்தற்கும், தென் திசையைக் கூறியது இங்கு வாழ்வார் ஒழுக்கத்தின் வழி இயினுரை இகழ்வர் என்பதற்கும் ஆம். அது நிற்க,

'சேற்றிற் பிறந்த செங்கழுநீர் போலப்
பிரமற்குக் கூத்தி வயிற்றிற் பிறந்த வசிட்டரும்
வசிட்டர்க்குச் சண்டாளி வயிற்றிற் பிறந்த சத்தியரும்
சத்தியர்க்குப் புலைச்சிதோள் சேர்ந்து பிறந்த பராசரரும்
பராசர்க்கு மீன்வாணிச்சி வயிற்றிற் பிறந்த வியாசரும்

(இந்நால்வரும்)

வேதங்க ளோதி மேன்மைப் பட்டு
மாதவ ராகி வயங்கின ரன்றே?

என இவ் வாசிரியர் வினவிய வினு,

'மாமறை மாக்கள் வருகுலங் கேண்மோ!
முதுமறை முதல்வர் முன்னர்த் தோன்றிய
கடவுட் கணிகை காதலன் சிறுவர்
அருமறை முதல்வ ரந்தண ரிருவரும்
புரிநூன் மார்பீர் பொய்யுரை யாமோ? என

அந்தணர்களை நோக்கி ஆபுத்திரன் கூறியதனைப் பின்பற்றிய தாகும்.

'வசிஷ்டரும், அகஸ்தியனும், பிரஹ்மா திலோத்தமை யென்னும் அப்ஸரஸைக் கண்ட காலத்துக் கலசத்து ஜனித்தனர். (நீல. சமய.) என்பது கதை யாதலின், அதனைக் கருதி அவ் வந்தண ரிருவரும் திலோத்தமை யென்னும் கணிகை மக்க ளல்லரோ என வினவிய தாகக் கொள்க.'

இவ் வகவலில் கபிலர் தம் வரலா றுரைப்பதாகக் கூறும் செய்தி பிற் காலத்தார் பொய்யாகப் புனைந்ததாகும். இதன்கண் ஒரு சிறிதும் உண்மை யில்லை யென்பதை அறிஞர் நண்குணர்வர். கடைச் சங்க காலத் தவருள், திருவள்ளுவர், கபிலர், ஔவையார், அதிகமான் என் பவரும், அடங்குவ ரெனக் கேட்டுப் பிற்காலத்தார் அவர்களுக்குள் முடி போட்டுக் கட்டிய இப் பொய்க் கதையை, இவ் வாசிரியர் உடம்படுவார் போன்று, கபிலர் கூற்றில் வைத்து, இவ் வகவலை யெழுதி யுள்ளா ரென்பதே துணி பாகும். இங்ஙனம் பொய்யை யுடன்பட்டது, தம் காலத்தவர் கொள்கையினை யுடன்படுவார் போன்று அவர்களைத் திருத்தும் நோக்கத்தினு லென்பது முன்னுங் கூறப்பட்டது. இப் பகுதியில், 'மேல் வகை கீழ்வகை விளங்குவ தொழுக்கால்' என இப் புலவர் அறிவுறுத்தியது, 'ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம், இழிந்த பிறப்பாய் விடும்' என்னும் திருக்குறட் பொருளைக் குறிப்பிடுதல் காண்க.

இவ் வுலகத்தில் மக்க ளனைவரும் ஒரு தன்மையரே! அவர்க ளெல்லார்க்கும் இவ் வுலகியல் வளங்களும், நுகர்ச்சிகளும், ஒப்ப வுரியனவே. ஐம் பெரும் பூதங்களும், அவர்களை வேறாகக் கருதிய தில்லை. இந் நாட்டில் எல்லார்க்கும் எல்லாம் உரியவை. செல்வத்தை யீட்டுதலும், இழத்தலும் தவஞ் செய்தலும், காலம் முடிந்த பின் இறத்தலும், ஆகிய ஆக்கமும் கேடும் உலக மாந்தர் அனைவருக்கும் பொதுப்பட வுரியனவாம். இவ் வுலகத்தா ரனைவரும் மக்கட் குலம் என்னும் ஒரு குலத் தவரே. உயர் திணை யாகிய ஒத்த குடிப் பிறப் புடைய வரே யாவர். இவர்கட்கு, இறப்பும் பிறப்பும் வேற்றுமை யின்றி, வினை யென்னும் ஒரே

காரணத்தான் உளவா வனவே. இவர்களால் பல் வேறு வடிவில், பல்வேறு பெயருடன் வழிபடப் பெறும், முழு முதற் பொரு ளாகிய கடவுளும் ஒன்றே. இக் கருத்துக்கள் யாவும் தமிழ் முன்னேர் கூறிய வாய்மொழிகளிற் பொதிந் துள்ளனவே யன்றிப் புதியன அல்ல. அவர் தம் வாய் மொழிகளைப் பிழையாது, என்றும் பிழைக்கும் வலியின்றி, இல்லை யென்று இரப்போர்க்கு வேண்டும் பொருள்களை அன்புடன் கொடுத்து, 'புலையும் களவும் கொலையும் தவிர்' என்னும் முது மொழியைக் கடைப் பிடித்து ஒழுகி, நிலை பெற நல் லற நெறியில் வாழும் முறைகளை யறிந்து, ஆணும் பெண் ணு மன்றி அருவாய் நிற்ப தாகிய மெய்ப் பொருளை யறிந்து, அதனை விரும்பிப் போற்றும் இவ் வாழ்க்கை முறை தவ றுடைய தாகாது. தொழில் வேறுபாட்டால் ஒருவர்க் குள தாகும் சிறப்பும் உயிரினும் காத் தோம் புதற் குரிய ஒழுக்கமு மன்றிப் பிறர் கற்பித்துக் கூறிய சாதி வேறுபாடு ஒருவர்க்கு உயர்ந்த நன்மைகளை ஒரு பொழு தும் தர வல்லதோ? ஒரு சிறிதும் தராது. அங்ஙனம் தருவ தாக எண்ணும் நீவிர் மிகவும் அறியாமை யுடையீர் எனத் தம் கால மக்களை இடித்துரைக்கின்ருர் இப் புலவர்

'மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ
காற்றுஞ் சிலரை நீக்கி வீசுமோ
மாநிலஞ் சுமக்க மாட்டே னென்னுமோ
கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ
வாழ்நான்கு சாதிக் குணவு நாட்டிலும்
கீழ்நான்கு சாதிக் குணவு காட்டிலுமோ
திருவும் வறுமையும் செய்தவப் பேறும்
சாவதும் வேறிலைத் தரணி யோர்க்கே
குலமும் ஒன்றே குடியும் ஒன்றே
இறப்பும் ஒன்றே பிறப்பும் ஒன்றே
வழிபடு தெய்வமும் ஒன்றே யாதலால்
முன்னே ருரைத்த மொழிதவ ருமல்
எந்நா ளாயினும் இரப்பவர்க் கிட்டும்
புலையுங் கொலையும் களவும் தவிர்ந்து
நிலைபெற அறத்தி னிற்பதை யறிந்து
ஆணும் பெண்ணும் அல்லதை யுணர்ந்து
பேணி யுரைப்பது பிழையெனப் படாது
சிறப்புஞ் சீலமு மல்லது
பிறப்பு நலந்தருமோ பேதை யீரே!

என இவ் வகவலின் முடி பொருளாக மேற்காட்டிய உண் மைகளை அறிவுறுத்திக் காண்கின்ருேம். இத் தொடரில்

முதல் ஆறடிகளிலும் இப் புலவர் எடுத் துணர்த்திய கருத்துக்களே இவ் விருபதாம் நூற்றுண்டில் மாந்தர் மதிக்கும் பொதுவுடைமைக் கொள்கையாக நன்கு பாராட்டப் பெறுகின்றது. இவ் வழகிய கருத்தினை முன்னரே யுணர்ந்து உணர்த்திய இத் தமிழ்ப் புலவரது உலகிய லுணர்வினை அறிஞர் வியந்து பாராட்டுதற் குரியர்! 'குலமும் ஒன்றே குடியும் ஒன்றே, வழிபடு தெய்வமும் ஒன்றே' என்னுந் தொடர், 'ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்' என்னும் திருமந்திரப் பாடலை யடியொற்றிய தாகும். 'சிறப்புஞ் சீலமு மல்லது பிறப்பு நலந் தருமோ பேதையீரே,' என்பது 'பிறப் பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா, செய் தொழில் வேற்றுமை யால்' என்னும் தெய்வப் புலவர் கருத்தைத் தெளிவாக விளக்குதல் காண்க. இவ் வாசிரியர் திருவள்ளுவனாரும், திருமூலரும் அறிவுறுத்திய கடவுட் கொள்கையினை அழுத்தமாகக் கடைப் பிடித்தவர் என்பது இவ் வகவலை ஊன்றிப் படிப்பார்க்கு எளிதில் விளங்கும்.

இதுகாறுங் கூறிய வாற்றால், கபில ரகவல் பாடிய புலவர் பழந் தமிழ் நூல்களை நன் குணர்ந்தவ ரென்பதும், இடைக் காலத்திற் றோன்றித் தம் காலத்து நிலவிய சாதிக் கோட் பாடுகளை வெறுத் தொதுக்கி, 'ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்' என்னும் பழந் தமிழ்க் கொள்கைகளை மீண்டும் தமிழ் நாட்டில் நிலை நாட்டும் வேட்கையுடையா ரென்பதும், இவர் காலத்தில் இறந்த முன்னோர்கட்காகச் சடங்கு செய்து பொருள் பெறும் வழக்கம் நிலவிய தென்பதும், நால் வகைச் சாதி வேறுபாடு இந் நாட்டில் மெல்ல, மெல்ல புகவே, அறிஞர்களி லெல்லாம் வேதியரே உயர்ந்தவர் என்னும் பிழை பட்ட கொள்கை நாட்டில் ஆங்காங்குப் பேசப் பட்டதென்பதும், அதன் பயனாகத் திரு வள்ளுவர், கபிலர் முதலிய உயர்ந்த செந்தமிழ்ப் புலவர்களையும், ஆரியர் குருதிக் கலப்பால் தோன்றியவர் என்னுங் கட்டுக் கதைகளை, அயலார் கட்டி, இந் நாட்டுப் பொது மக்களை நம்பச் செய்து வந்தன ரென்பதும், அந் நம்பிக்கையிற் சிக்குண்டு உண்மை யறியாது அறியாமையிற் புரண்ட பொது மக்களுக்கு அறிவு கொளுத்த எண்ணிய இப் புலவர் கபில ரகவல் என்னும் அகவலைக் கபிலர் கூற்றாகப் புனைந்துரைத்தன ரென்பதும், இவ் வகவலில் தம்மையும் திருவள்ளுவர் முதலியவர்களையும் பற்றிக் கபிலர் கூறியதாக அமைந்த செய்திகள், அயலாரால் பொய் யாகப் புனைந்துரைக்கப் பட்டனவே என்பதும், அப் பொய்க் கதையிற்

கூறப் பட்ட கபிலர், தம் கதையை ஒத்துக் கொண்டு கூறுவது போல் இக் கபில ரகவலை இவர் இயற்றியதற்கு, அப் பொய்க் கதை யாளரை ஆதரிப்பது போற் காட்டி, அவரை யழைத்து அவர் தம் பொய்ம்மையால், விளைந்த அறியாமையினைத் தகர்த் தெறிந்து, பொது மக்களை யொன்றுபடுத்த வேண்டு மென்னும் விருப்பமும், பழமை கருதி எல்லோரும் ஏற்றுக் கொள்வ ரென்னும் துணிபும், தம் கூற்றாகக் கூறின், சாதிச் செருக் குடையார் தம்மையும் தம் நூலையும் ஓங்க வொட்டாது தடை செய்வ ரென்னும் அச்சமுமே காரணங்க ளா மென்பதும் இனிது புலனும். இங் ஙனம் தம் காலத்து நிலவிய தவறுகளை முன்னோ ராகிய கபிலர் பெயராற் கண்டித்து, இவ் வகவலை இயற்றிய தமிழ்ப் புலவர், ஏறக் குறைய இரு நூருண்டுகட் குட்பட்டு வாழ்ந்தவ ராதல் வேண்டும். இது இந் நூலின் பிற்கால மொழி நடையால் இனிது புலனும். பொய்க் கதைகளை யுடன் பட்டெழுந்த நூலாயினும் பண்டைத் தமிழ்ப் புலவர் கொண்டொழுகிய பொது வறங்களை, இக் காலத்தவரும் ஏற்றொழுகும்படி எளிய முறையில் விளக்குந் திறத்தால் இவ் வகவல் பெரிதும் பாராட்டத் தகுஞ் சிறப்புடையதாகும். இடைக் காலத்தே வாழ்ந்த சாதிச் செருக் குடையார்களின் பொருந்தாக் கொள்கைகளைக் கண்டிக்கத் தொடங்கிய இப் புலவர், அவர் மனம் வருந்தாதபடித் தம்மையும் அவர்களுள் ஒருவ ராக்கி அறி வுறுத்திய திறம், குற்றங் கடியும் திறத்தில் வல்ல இவர்தம் நுண் ணறிவினை நன்கு புலப் படுத்தவ தாகும்.

இந் நூல் முழுவதும் நடைப் போக்கிலும் கதைத் திறத்தலும், மணிமேகலையில் சாத்தனார் கூறிய ஆபுத்திரன் வரலாற்றை யடியொற்றி விளங்குகின்றது. சீர் திருத்தக் கருத்துக்களை எடுத் தாள்வதில், திருக் குறள், ஔவையார் நீதி நூல்கள், திருமந்திரம் முதலிய நூற் கருத்துக்களை அவ் வாறே யெடுத்து வழங்குகின்றது. சொல் லமைப்பு முறையில் பழந் தமிழ் நூல்களின் ஒழுங்கினைப் பின் பற்றுகின்றது. எனினும் இது தோன்றிய பிற்காலத்தை இதனுல் மறைக்க முடியவில்லை. கடவுட் கொள்கையைக் கடைப் பிடித்து நின்று சமூக சீர்திருத்தம் செய்ய எழுந்த இவ் வகவலின் பெருமையையும், இன்றி யமையாமையினையு முணர்ந்த அறிஞர் சிலர் இந் நூலைப் பதிப்பிட்டு வழங்கினமையும் கருதற் குரிய தாம்.

மற்றும்

தமிழ் வாழ்க.

# பரத சாத்திரம்

## பாயிரம்

### காப்பு

சித்திவி நாயகன் சேவடி பரவுதும்
உத்தம பரதநூ லுரைத்திடற் பொருட்டே.

(இதன் பொருள்) மேன்மையான பரத நூலைச் சொல்லுதற் பொருட்டுச் சித்தி விநாயகன் செய்ய தாமரை மலர் போன்ற பாதங்களை வணங்குவாம் - என்றவாறு. (க)

### சொக்கநாயகர் துதி

விரத மாதவர் சந்ததம் பரவிடு விமலன்
வரத னாகிய வெள்ளிமன் றுடையவன் மலர்த்தாள்
கரத லங்களான் மலர்கடூய்க் கதழ்ந்திறைஞ் சுவனல்
பரத நூலினைச் சுருக்கியே பகருதற் பொருட்டே.

(இ-ள்) சிவனடிக்குத் தொண்டு செய்வதையே விரதமாகக் கொண்ட மகா தபோதனர் நாடோறும் பரவுகின்ற பரிசுத்தனும், வரங் கொடுப்பவனும், வெள்ளி யம்பலத்தினையுடையவனுமாகிய சொக்கநாயகன் பாத தாமரைகளைப் பரத நூலைச் சுருக்கிச் சொல்லுதற் பொருட்டுக் கரங்களால் மலர் கொண் டருச்சித்து விரைந்து வணங்குவேன் - எ-று. (உ)

---

(க) இய லிசை நாடகம் என்னும் முத் தமிழுள் நாடகத் தமிழின் பாற்பட்ட நாட்டிய நன் னூலாகிய பரதத்தின் இயல்பினை வகுத்துரைக்கக் கருதிய இந் நூலாசிரியர், திரிபுர மெரித்த விரிசடைக் கடவுள் புலவரோடு ஒருங்கிருந்து தமி ழாராய்ந்த உயர் மதிற் கூட லாகிய மதுரையில் தமிழ் வளர்ந்த திறத்தினை இடைவிடாது எண்ணும் இயல்புடையராதலின் மதுரைத் திருவாலவாயில் எழுந்தருளிய மூத்தபிள்ளையா ராகிய சித்தி விநாயகர்க்கு முதற்கண் வணக்கங் கூறினாரென்க.

(உ) நாட்டிய நூல் கூற வந்த ஆசிரியர் மதுரை வெள்ளியம்பலத்துக் கால் மாறி யாடிய ஆட லரசாகிய சொக்கநாயகனை வணங்கிப் போற்றுதல் இந்நூலுக்கு ஏற்புடைக் கடவுள் வாழ்த்தாதல் அறிக.

## மீனாட்சியம்மை துதி

பண்டு பாண்டியன் தவப்பெணாய்ப் பாரெலாம் புரந்து
எண்டி சாமுக மியாவையுஞ் சயங்கொண்டே யிறைவன்
விண்ட சொற்படி மணந்துபின் விமலனார் பாகங்
கொண்ட நாயகி குலமலர்த் தாளிணை தொழுவாம்.

(இ-ள்) முன்னம் மலையத்துவச பாண்டியனுடைய தவப் பெண்ணாகித் தடாதகையென்னும் பெயர்கொண்டு உலகத்தை யரசு செய்து திக்கு விசயம் பண்ணித் தலைவனாகிய சிவபெருமான் கூறியவாறு அவரை மணந்து அவர் வாமபாகம் பெற்ற மீனாட்சியம்மையின் சிறந்த திருவடிகளை வணங்குவாம். எ-று

## பரப்பிரமத்தின் துதி

கருதிய நடனச் செய்கை கருத்துடன் செய்யும் போது
இருவுரு வாகி முன்னே யேகம தாகி நின்ற
அருள்பெறுங் குரவ னாகி யழியாத வஸ்து வான
திருமிகு பொருளைச் சிந்தை சேர்த்துவாழ்ந் திடுவன் மன்னோ.

(இ-ள்) நடனஞ் செய்யும்போது, சத்தி சிவ மாகியும், முன்னமே ஒருரு வாகியும், குருமூர்த்த மாகியும், அழியாத பரவஸ்து வாகியு மிராநின்ற அருட் செல்வ நிறைந்த ஒப்பற்ற பொருளை யென் சிந்தையு ளிருத்துவன் - எ-று. (௪)

## பரமசிவன் துதி

நீதிசேர் நிருத்தந் தானே நிகரிலாத் தாள ரூபம்
சோதிசேர் தாள ஞான சொரூபமா மதன்ற னாதம்
ஓதிய சிவம தாகி யுமையொரு பாகம் வைத்த
ஆதியா நின்ற மூர்த்தி யடியிணை சென்னி வைப்பாம்.

(இ-ள்) நிருத்த மென்பது தாள ரூப மாம்; அத் தாளம் ஞான ரூப மாம்; அதன் ஓசை சிவ ரூப மாம்; அவ் வோசை ரூப மாகி உமாதேவியை வாம பாகத்தில் வைத்து நின்ற ஆதி மூர்த்தியின் உபய பாதங்களைச் சிரசில் வைத்து வணங்குவாம். எ-று. (௫)

### திருமால் துதி

திடங்கொண்ட பச்சை மேனிச் செங்கண்மால் கதிர்மா ணிக்கப்
படங்கொண்ட நாக ராசப் பள்ளியான் பதும நாபன்
இடங்கொண்ட கருணைக் குன்ற மெழிற்றிரு மார்பன் பாலின்
கடங்கொண்ட கலுழ னேறுங் கருமுகின் மலர்த்தாள் போற்றி.

(இ-ள்) பெருமை பொருந்திய பச்சை மேனியையும் செந்தாமரை போன்ற கண்களையு முடையவன், பிரகாசம் பொருந்திய அரதன மணிகளை யுடைய பணமுடி நாக ராசனைச் சயனமாக வுடையவன், பதுமநாபன், விசால மாகிய கிருபாமேரு, அழகிய விலக்குமியை மார்பினி லுடையவன், அமுத கடத்தைத் தேவ லோகத்திலிருந்து கொண்டுவந்து கொடுத்துத் தன் தாயின் அடிமை மீட்ட கருடனை ஏறிச் செலுத்திய மேக வண்ணன் தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்குவாம் - எ-று.

பாலென்பது - அமுதத்திற்குப் பரியாய நாமம். (சு)

### விநாயகர் துதி

அம்மானை யம்புலியை யணிமுடியி லணிந்துமழு வங்கை தன்னில்
அம்மானைக் கொண்டபர னளித்தானைக் காஞ்சிநக ரதனின் முன்னாள்
அம்மானை விகடக்கூத் தாட்டிமகிழ் நாயகனை யழகு வாய்ந்த
அம்மானை முகத்தானை யடிவணங்கி யனுதினமு மகத்துட் கொள்வாம்.

(இ-ள்) கங்கா தேவியையும், மூன்றும் பிறையையும் அழகிய முடியி லணிந்து, கையில் மழுவையும், அந்த மானையுங் கொண்டிராநின்ற பரமசிவன் பெற்ற புத்திரனை, பூர்வத்தில் காஞ்சி நகரில் தன் அம்மானாகிய திருமாலை விகடக் கூத் தாட்டுவித்து மகிழ்ந்த நாயகனை, அழகிய யானை முகத்தை யுடையவனை வணங்கி அவனது திருவடித் தாமரையை அகத்துள் வைப்பாம் - எ-று. (எ)

### முருகர் துதி

புள்ளிமயில் வாகனனைப் பொருமயினற் படையானைப் புனித வேளை
வள்ளிதிரு நாயகனை வானவர்கள் சிறைமீட்டு வான வேந்தன்

உள்ளமுறை சேவகனை யுயர்மலய முனிவனுக்கன் றுபதே சித்த
கள்ளவிழ்பூங் கடம்பணிந்த காங்கையனை யாங்கருத்திற் கருதி வாழ்வாம்.

(இ-ள்) புள்ளி மயில் வாகனனை, போர் செய்கின்ற வேலாயுதத்தை யுடையவனை, பரிசுத்த மாகிய செவ்வேளை, சிறந்த வள்ளிநாயகியின் கணவனை, தேவர்கள் சிறையை மீட்டு இந்திரன் மனத்தில் நீங்காதிருக்கின்ற சேவகனை, மலய முனிவனுக்கு முன்புபதேசித்த தே னொழுகாநின்ற கடப்ப மாலையைத் தரித்த காங்கையனை யாங்கள் கருதி வாழ்வாம். எ-று. (அ)

### சரசுவதி துதி

வெண்டா மரையாள் படிகவொளி
விளங்குந் தேக வெழிலுடையாள்
வண்டா டியபூங் கருங்குழலாள்
மதுர மொழுகுஞ் செவ்வாயாள்
கண்டார் மனங்கள் களிக்கவவர்
கண்ணிற் பிரம னுவுறைவாள்
கொண்டா ளடிமை சொல்லமிர்தங்
கொழிக்க வெனக்குக் குவலயத்தே.

(இ-ள்) வெண்டாமரை மலரி லிருப்பவளும், படிக நிறத்தையும் வண்டுகள் மொய்த்த பூவை யணிந்த கரிய கூந்தலையும், மதுர மொழுகிய சிவந்த வாயினையும் உடையவளும், தரிசித்தவர்கள் மனங் களிக்கும்படி அவர்கள் கண்களிலும், பிரமதேவன் நாவிலும் வாழ்பவளும், என் னுவி லமுத மூறும் படி இவ்வுலகத்தில் என்னை யடிமை கொண்டவளு மாகிய சரசுவதியின் திருவடிகளை வணங்குவாம் - எ-று. (கூ)

### வடமொழியில் ஆக்குவித்தோன் பெயர்.

*குணந்திகழ் பரதந் தன்னைக் கோனதாஞ் சோம ராயன்
இணங்குசா ரங்க தேவ விருடியால் வடசொற் றன்னில்
கணம்பெறு மிலட்ச மாகக் கழறினன் மலய வெற்பன்
மணங்கொள்செந் தமிழி லாரு யிரமதா வகுத்தான் மன்னோ.

(இ-ள்) பிரகாசம் பொருந்திய பரத நூலைச் சோமராய னென்னு மரசன் சாரங்கதேவ ரிஷியால் வடமொழியில் ஒரு லக்ஷஞ் சுலோகஞ் செய்வித்தனன், அதைப் பொதியாசலத்தில் இராநின்ற அகத்திய முனிவர் ஆறுயிரஞ் சூத்திரமாகத் தமிழிற் செய்தார் - எ-று. (ய)

* கி. பி. 13-ம் நூற்றூண்டில் வாழ்ந்தவராகிய சாரங்கதேவரை அகத்தியர்க்கு முற்பட்டவரெனல் வரலாற்றுக்கு ஒவ்வாத கூற்றும்.

### முதனூல் வழி

ஆரி யப்பெருங் கடலுள பாரத நூ லதனை
காரி பாகன தருள்பெறு குறுமுனி விரித்தே
பாரி னோர்பெறத் தென்சொலாற் பகர்ந்தன ரதனைத்
தேரி னோர்முனஞ் சுருக்கியான் செப்பிடத் துணிந்தேன்.

(இ-ள்) ஆரிய மென்னும் பெரிய கடலிற் கூறிய மகா பாரத நூலை, உமாதேவியை வாம பாகத்தி லுடைய பரமசிவ னருள் பெற்றோங்கிய (பரமாசிரிய ராகிய) அகத்திய முனிவர் விரித்து உலகிலுள்ளோர்க ளுணரத் தமிழினால் (ஆறாயிரஞ் சூத்திரம்) செய்தனர். அந்நூலை யான் சுருக்கிச் சூத்திர மாகவும், பா, பாவின மாகவும், சகல சாஸ்திரங்களிலுந் தேர்ச்சி யுற்ற மூதறிஞர் முன் (அறிவிலி யாகிய யான்) சொல்லத்தொடங்கினேன் - எ-று. (கக)

### அவையடக்கம்

மண்டு நற்றிரை யுளவுண வுவரிநீ ரதனைக்
கொண்ட லுண்டமு தாக்கிய கொள்கைபோற் பெரியோர்
கண்டு மற்றுள வழூஉத்தனைக் களைந்துதூய் தாக்கிக்
குண்டு நீருறை யுலகினர்க் குணர்த்துதல் குறியே.

(இ-ள்) நெருங்கிய அலைகளை யுடைய உண்ணுதற்கும் உடம்பழுக்கைக் கழுவுதற்கும் உதவாத உவர்க்கடலை, மேகங்களுண்டு உவரைக் கெடுத்து உலகத்தவர்க் கமுதமாக்கித் தருஞ் செய்கை போலக், கல்வி கேள்விகளில் மிக்க சான்றோர் இதிலுற்ற வழூஉக்களைக் களைந்து பரிசுத்த மாக்கிக் கடல் சூழ்ந்த உலகத்தவர்க்குத் தெரிவிப்பது அவரது கடன் - எ-று. (கஉ)

### ஆக்கியோன் பெயர்

திருமிகுத்தநற் சைவருந் தெளிந்தநா வலரும்
பெருமிதத்தொடு வாழ்ந்திடு திருப்பெருந் துறையில்
அருமை கங்கைகு லாதிப னமர பத்தன்
பரம தாகிய பாதத்தைச் சுருக்கியே பகர்ந்தான்.

(இ-ள்) கல்விப்பொருள் செல்வப் பொருள்களில் நிறைவுற்ற நற்சைவ மாதவரும் நூற்கேள்விகளிற் றெளிந்த நாவலரும் மிக்க சிறப்புடன் வாழ்ந்திராநின்ற திருப்பெருந்துறை யென்னு நகரத்தி லருமை பொருந்திய கங்கை குல திலக னாகிய அரபத்த னென்னு மாசிரியன் அபார மாகிய பரத சாத்திரத்தைச் சுருக்கிக் கூறினன் - எ-று. (கங)

பாயிரம் முற்றிற்று.

# திருப்பந்தணை நல்லூர்ச் சிவன்கோயில் கல்வெட்டுக்கள்

வித்துவான் வை. சுந்தரேச வாண்டையார், திருவையாறு.

## முன்னுரை

திருப்பந்தணைநல்லூர், என்பது சோழ நாட்டுத் தேவாரம் பெற்ற பதிகளுள் ஒன்றாகும். இது தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணப் பிரிவில் குற்றாலத்திற்கு (திருத்துருத்திக்கு) வடக்கே, மண்ணியாற்றின் வடகரையில் இருக்கின்றது. சிவநெறிக் குரவர்களால் பாடப் பெற்ற பழமையும் பெருமையும் வாய்ந்தது. இத்திருக்கோயிலில் பிற்காலத்துச் சோழமன்னர்கள் காலத்தவை ஆறும்,விசயநகரவேந்தரான அச்சுததேவமகாராயர் காலத்தவை இரண்டும், எல்லன்காலிங்கனைப் பற்றியது ஒன்றுமாக ஒன்பது கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகளையன்றி, இக் கோயிலைப்பற்றி, இவ் வூர் ஆதிகேசவப்பெருமாள் கோயிலில் உள்ள கோனேரி தேவ மகாராசா கல்வெட்டு ஒன்றிலும் குறிக்கப்பெற்றுள்ளது. இக் கோயில் கல்வெட்டுக்களை எல்லாம் கல்வெட்டுத்துறையாளர் படியெடித்துச்சென்று அவைகளின் குறிப்புக்களை 1931, 1932-ம் ஆண்டு அறிக்கைகளில் வெளியிட்டுள்ளனர். (Annual Reports on South India Epigraphy for the year ending March 1931 and 1932). ஆனால் அக் கல்வெட்டுக்கள் (Texts) தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் இதுகாறும் வெளிவந்தில. அவைகளின் சுருக்கம் கீழ்வருவன.

### அளிக்கப் பெற்ற நிபந்தங்கள் :—

முதலாம் இராசராச சோழன் அரியணை ஏறிய பத்தாம் ஆண்டில் மண்ணியாற்றிற்கு வடகரையிலுள்ள காட்டூராகிய அவனி மாணிக்கச் சதுர்வேதிமங்கலத்துக் கோமடத்து இருந்த சர்வ கிரத்துயாஜியார் தட்சணாமூர்த்தி பட்டர் மகனார் பெரிய நம்பி பட்டரும், அவரது மனைவியாரும், இக் கோயில் இறைவராகிய பசுபதி தேவர்க்குக் காலை மாலை இருபொழுதும் ஒரு திருவிளக்கு ஏற்றி எரிக்க, இவ் வூரில் (பந்தணைநல்லூரில்) இருந்த

திருவையாறு சிவலோகன் என்னும் அந்தணரிடம் இரண்டு காசைக் கொடுத்திருந்தனர்.

உத்தமசோழ தேவரது தாயாராகிய செம்பியன் மாதேவியார், இக் கோயில் பசுபதி ஈசுவரர்க்குத் திருநுந்தா விளக்கு ஒன்றுக்குப் பொன் பன்னிரு கழஞ் சாக விளக்கு மூன்றுக்கு முப்பத்தாறு கழஞ்சு பொன்னை முதலாம் இராசராச மன்னனது பதினொன்ருமாண்டில் கொடுத்திருந்தனர். இந் நிபந்தத்தை அக் காலம் ஏற்று நடத்தியவன் ஆஸ்யன் விக்கிரமாதித்தன் ஆச்சனுன இராசராச நாடகப் பெரியன் ஆவன். இந் நிவந்தப்படி இவன் நாள் ஒன்றுக்கு நறு நெய் உழக்காக நெய் மூவுழக்குச் செலுத்தி வந்தான். இவனுக்குப் பிறகு இவனது மக்களாகிய சிங்கப்பிரியனும் இராமேந்திர சோழனும் இவ் வுரிமையை ஏற்று நடத்திவந்தனர். இவர்களுக்கு ஆண் மகவு இன்மையால் இவர்கள் மருமகன் அரையன் உய்ய நின்றிடுவானுகிய இராச ஸ்ரீ நிருத்தப்பேரையன், குலோத்துங்கசோழதேவரின் (முதற்குலோத்துங்கன்) கட்டளைப்படி முப்பது ஆண்டுகள் நடத்தி வந்தான். பின் இவன், மேற்சொல்லப்பட்ட இராசேந்திரசோழனுக்குப் பிறகு அமங்கலியா யிருந்த வேளான் துக்கை பக்கல் விக்கிரமசோழ தேவரின் ஆரும் ஆண்டில் அந்த உரிமையை விலைக்கு வாங்கிக் கொண்டான்.

இரண்டாம் இராசாதிராசனின் ஐந்தாம் ஆண்டில் இராமேச்சரமுடையான் சதாசிவதேவனுன இராசராச சகச்ர பாஹு என்பான் பசுபதி தேவர்க்குக் கீழைத் திருவீதிக்கு நாற்பத்து நான்கு கோல் நிலம் கொடுத்துள்ளான். இந் நிலம் இவனது அண்ணனுகிய இராமேச்சரமுடையான் மாதேவனுன சோழப் பல்லவரையனுடைய தாகும்.

மூன்ருங் குலோத்துங்கன் அரியணை ஏறிய இருபத்துநான்காம் ஆண்டு. நாள்பதினுறில் பசுபதி தேவர்க்குச் சாத்த. ஆறு கழஞ்சு பொன்னுல் செய்யப்பட்டதும், மாற்று எட்டு உடையயதும் ஆகிய உத்தரீயமும் பூணூலும் வாடகையாட்ட ஆதிச்ச பிள்ளையால் கொடுக்கப்பெற்றது. இம் மன்னனது முப்பத்தொன்பதாம் ஆண்டில் நாள்தோறும் இறைவனுக்குத் திருமஞ்சன காலத்திலே சந்திர சூரியர் உள்ளவரை சாத்தி யருளுதற்கு ஒருபதின்கழஞ்சே முக்காலே இரண்டுமஞ்சாடியும், நாலு மாவினுல் செய்யப்பெற்றதும், எட்டேமுக்காலே அரைக்கால் மாற்று உடையதுமான பொன்னுல் செய்யப்பெற்ற திருக்கோளிகை ஒன்றை வாரணுசி பிட்சை மடத்து இராவளன், இக் கோயில் அங்காடியில் சேர்த்துள்ளான். (திருக்கோளிகை என்பதே இக் காலம் திருக்குவளை என்று வழங்கப்பெறுகின்றது.)

**அச்சுததேவமகாராயர் கல்வெட்டு :—**

கொள்ளிட ஆற்றுக்குத் தெற்கு, பழவாற்றுக்கு வடக்கு திருவாப்பாடிப் பெருவழிக்குக் கிழக்கு திருமுல்லை வாசலுக்கு மேற்கு உட்பட்ட சீமை சபையார், வயிரவ நயினர் மகனர் சேத்திர பாலர்க்குக் கணக்குப்பேருக மாத்தூரில் ஆறுவேலி நிலத்தை இறையிலியாகக் கொடுத்துள்ளனர். இக் கல்வெட்டு சகம் 1452 அஃதாவது கி.பி. 1580ல் பொறிக்கப் பெற்றதாகும். இம் மன்னர் காலத்தில் வழுதுளம்பட்டிச் சாவடிக்கு அருகிலுள்ள ஒரு ஊரைக் கோயிலுக்குக் கொடுத்ததாகப் புலப்படுகின்றது. காஞ்சிபுரத்துக் கோனேரி தேவமகாராசா, பசுபதீச்சரமுடைய நாயனுர்க்கும், ஆதிகேசவப் பெருமாளுக்கும் மகாபூசை, திருப்பணி, திருத்திங்கள் திவதம், திருநாள், திருத்தேர் ஒன்றில் ஒன்று குறைச்சல் அற நடத்தும்படிக்கு நிபந்தம் அளித்துள்ளனர்.

## வரலாற்றுப்பகுதி.

**இவ் வூரைத் தன்னகத்து அடக்கிய நாடு :—**

முதலாம் இராசராசன் கல்வைட்டு இக் கோயிலில் ஒன்றுதான் உள்ளது. அது அம் மன்னனது 10-ம் ஆண்டில் பொறிக்கப் பெற்ற தாகும். அதில் இவ் வூர், பந்தணை நல்லூர் என்றே குறிப்பிடப் பெற்றிருக்கிறது. விக்கிரம சோழனது ஒன்பதாம் ஆண்டுக் கல்வெட்டில் இவ் வூர் வடகரை விருதராச பயங்கர வள நாட்டுப் பந்தணைநல்லூர் என்று கூறப்படுகிறது. இம் மன்னனுக்குப் பிற்பட்டோர் காலத்துக் கல்வெட்டுக்களிலும் இப் பெயரே காணப் படுகிறது. எனவே சுந்தரமூர்த்தி நாயனுரால் நாட்டுத்தொகையில் குறிப்பிடப்பெற்ற **விளத்தூர் நாட்டு விளத்தூர்** என்பது இப் பந்தணைநல்லூர்க்குப் பக்கங்களிலே இருத்தல் வேண்டுமென்று உய்த் துணரக்கிடக்கின்றது.

**இராசராச நாடகம் :—**

இது முதலாம் இராசராசனின் வரலாற்றை நாடக முறையில் எழுதப்பெற்ற நூலாகும். இந் நூல் இதுபொழுது கிடைத்திலது. இது முதலாம் இராசராசனின் பதினுரும் ஆட்சியாண்டிற்கு முன்னரே இயற்றப் பெற்ற தாகும். இச் செய்தி, இக் கோயிலில் நட்டுவப்பங்கு, மெய்மட்டிப்பங்கு இவைகளையுடையனுய் இருந்தவன், ஆஸ்யன் விக்கிரமாதித்தன் ஆச்சனுன இராசராச நாடகப்பெரியன் என்று பேசப்படுவதிலிருந்து அறியக்கிடக்கின்றது.

### கோயில் பொன்னைக் கூறிட்டுக்கொண்ட குற்றத்திற்கு விதித்த தண்டனை :—

இவ் வூர்ப் பசுபதீச்சரருக்குத் திருவாபரணம் செய்யக் கொடுத்து, தேவர் பண்டாரத்திலே ஒடுக்கி இருந்த பொன்னிலே சிறிது பொன்னை இக் கோயில் சிவப்பிராமணர் சிலர் கூறிட்டுக் கொண்டனர். இக் குற்றத்திற் காக இச் சிவப்பிராமணரும், இவர்கள் வழிவந்தாரும் இப் பசுபதீச்சுரர் கோயிலிலும், இக் கோயிலில் எழுந்தருளுவிக்கப் பெற்ற **விக்ரமசோழீச்சரமுடையார்** கோயிலிலும் **குலோத்துங்கச் சோழீச்சரமுடையார்** கோயிலிலும் புகுதப் பெருர்களாக என்று மூன்ரும் இராசராச சோழன் கட்டளை இட்டதோடு, அவர்கள் இக்கோயில் திருப்பணிக்கு உடலாக நூற் றெண்பது காசை ஒடுக்கக் கடவ தாகவும் உத் தர விட்டான்.

### கோயிலைப் புதுப்பிப்பார் கையாண்ட பண்டைய முறை :—

பழங் கோயிலை இடித்து விட்டுப் புதுப்பிப்பவர், அப் பழங் கோயிலில் இருந்த கல்வெட்டை அதில் இருந்தபடியே அக் கோயி லில் ஒரு இடத்தில் பொறித்து வைப்பது வழக்க மாகும். அப்படிப் பொறித்த கல்வெட்டின் மேல் 'பழங் கல்வெட்டில் கண்டபடி' என்று எழுதுவார்கள்.

இவ் வழக்கத்தை இவ் வூர்க் கல்வெட்டு அறிவிக்கின்றது. அதைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

இடம் :—அர்த்தமண்டபத்தின் தென்புறம் பழங்கல்வெட்டுப்படி

வரி 1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோ ராஜ கேஸரி வந்மற்க்கு யாண்டு ம பங்

2. தண நல்லூர் பதிபதி தேவர்க்கு ஒரு திருவிளக்கு கா

3. லை மாலை இரு பொழுது ஏற்றி எறிக்க இக்கோயில் பி

4. ஷண்ண் வூாஜாவதன திருவயாறு வவ்லூா சிவலோக

5. ன் பக்கல் இவனேபாதி காணி உபயமாக நான் கொடுத் த கா

6. சு இரண்டுக்கு தங்கள் பலஞு இரு நாழி எண்ணே

7. யால் ஸந்தி விளக்கு வைத்தேன். மண்ணி வட

8. கரை காட்டூர் அவனி மாணிக்கச்சருப்பேதிமங்கல

9. த்து கோமடத்து தக்ஷிணமூர்த்தி பட்ட ஸஷ க கூயா
10. ஜியார் மகன் பெரிய நம்பி விட்ட நெனு பிரெ
11. மபுறத்து பிரமச்சேரமாகியார் மகளான நான
12. யு பிரமச்சானியும் சந்திராதித்தவல் மாகே
13. ஸ்வர ர : க்ஷ |||—

குறிப்பு :—இக் கல்வெட்டு முதலாம் இராசராச சோழனின் பத்தாம் ஆண்டில் அஃதாவது கி-பி 995-இல் பொறிக்கப் பெற்றதாகும். எனவே இக் கோயில் இவனுக்குமுன் கற் றளியால் ஆக்கப் பெற்று மிகச் சீரண நிலையில் இருந்து, இவன் காலத்தில் கட்டப்பெற்ற தாதல் வேண்டும்.

## எழுந்தருளுவிக்கப் பெற்ற திருமேனிகள் :—

பரகேசரி வன்மன் திரிபுவனச் சக்ரவர்த்திகள் இராசராச தேவர் கோனேரின்மைகொண்டான் (மூன்றும் இராசராசன்) காலத்துக்கல்வெட்டில்,இக்கோயிலில் விக்கிரமசோழீச்சரமுடையாரையும், குலோத்துங்க சோழீச்சரமுடையாரையும் எழுந் தருளுவிக்கப்பெற்ற செய்திகள் கூறப் பெற் றுள்ளன. இவ் விரு திருமேனிகளும் இக்காலம் முதல் பிரகாரத்துக் கொன்றை மரத் தடியி லும், இரண்டாம் பிரகாரத்தில் இரண்டாம் கோபுரத்துத் தென்பா லுள்ள செங்கற் கோயிலி லும் எழுந்தருளி யிருப்பவர்க ளாதால் வேண்டும். ஈண்டுக் குறிக்கப் பெற்ற விக்கிரம சோழீச் சரமுடையாருக்கு விக்கிரம சோழமங்கலம் என்னும் ஊரும், குலோத்துங்க சோழீச்சரமுடையாருக்குச் சய சிங்கமங்கலம் என்னும் ஊரும் தேவதான ஊர்களாகக் கொடுக்கப் பட்டிருந்தன.

## காலிங்கன் எல்லனைப்பற்றிய கல்வெட்டு :—

இது, முதல் கோபுரத்துவாசலின் வடக்குப்பக்கத்தில் இருக்கின்றது. இதில் நான்கு செய்யுட்கள் அடங்கியுள்ளன. இவையனைத்தும் எல்லனது புகழைப்பற்றிக் கூறுகின்றன. இவன் தமிழில் மிக்க பற்றுடையவன் என்றும், கொடையில் பாரியிலும் மேம்பட்டவன் என்றும் பேசப்படுகின்றான். இப் பாடல்களின் எழுத்தை நோக்க இவன் பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்தவனாதல் வேண்டும்.

## பாடல்கள்.

I. நன் காவி வளரும்
வளநாட்டமெ
னுங்காவினிய
ல் காவி கண்டா
லுறங்காதோ
தென்கலை பாராட்
டிய மூதண்டமெல்லா
ம் என்னை முன்னே வா
சற்றிறந்து காட்டிய
வெல்லா காலிங்கா ௭

II. எம்பாரி காலிங்க னெல்லன் காப்பவரெண்ணி லொற்றைக்
கொம்பாருந் தம்பி குகனுரும் தகு கன்னுர் பெற்ற
வம்பார் சடையா ரண்ணுமலை யாரு மண்ணு மலையார் தம்பாகத்
தம்மையு மம்வையைச் சூழ் பஞ்ச சத்தியுமே ௭

III. நாலங்க வாளி பெற்ருர் நாரியரே பாரியிலு
மேலங்க மானகொடை வேளான்—காலிங்க
னெல்லனுக்கே பெறுமோ விந்திரநீ லங்கருப்பு
வில்லன்கைக் கேபெறுமோ மீன் ௭

IV. கதையியிது சொல்லப் போதும் நங்காவிற் களிறு புக்காற்
சிதையாதன தழைகண்டறியேஞ் செங்கை வேலால் பாற்ற
ளிதையா ரரவிந்தத் திருத்திய காலிங்கனெல்லன் வெற்பில்
மதயானையைத் தழையை செற்றதாமிவரு வல்லபமே ௭